# பாட்டாளி சிந்தனை

Volume 33 No 6 — சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**

February 2023 — தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ் — விலை ரூ 5




**5 ஆகஸ்டு 1923 – 5 ஆகஸ்டு 2023**

**எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளர் தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டை அனுசரிப்போம்**

பகுத்தறிவு (Reasoning) ஒன்று மட்டுமே போராட்டத்தின் ஓர் அம்சம் என்றாகிவிடாது. பகுத்தறிவு, உணர்ச்சி (Emotion) என்ற இரண்டையும் போராட்டம் வேண்டுகிறது. புரட்சியும் இதற்கு விதிவிலக்கல்ல. கருத்துக்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றோடு உணர்ச்சி ஈடு கொடுத்துச் செல்லாவிட்டால், ஓர் இடைவெளி அங்கே உருவாகும். பிறகு கருத்துக்களில் நிச்சயம் குழப்பம் வரும். போராட்டங்கள் திசைமாறி ஒரு குருட்டுத்தனமான பாதைக்குச் சென்றுவிடும். இன்று மக்கள் இயக்கங்களில் வெற்றுக் கோஷங்களை எழுப்புவது பிரதான அம்சமாக ஆகிவிட்டது. சமுதாயத்தின் அடிப்படை மாற்றத்தை, ஒரு புரட்சிகர மாற்றத்தை வேண்டி இயக்கங்கள் பொங்கி எழுகின்றன, வெடித்துக் கிளம்புகின்றன, மக்கள் உயிரிழக்கிறார்கள், இளைஞர்கள் தம் உயிர்களைத் தியாகம் செய்கிறார்கள். ஆனால் கருத்துக்களோடு புரட்சிகர உணர்ச்சி வளர்ந்து ஒருங்கிணையாததால் சமுதாயத்தின் அடிப்படை மாற்றம், அதாவது புரட்சி இன்னும் எட்டாத தொலைவிலேயே இருக்கிறது.

**– சிப்தாஸ் கோஷ்**

# பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தை உயர்த்திப் பிடிப்போம்

*[தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டான இவ்வருடத்தை அனுசரிக்கும் வகையில் அவரது படைப்புகளிலிருந்து சில அம்சங்களை பிரசுரித்து வருகிறோம். அவ்வகையில், 'ஏன் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) மட்டுமே ஒரே உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி' என்ற தலைப்பில், **1969**, மார்ச் **18**ல் தோழர் சிப்தாஸ் கோஷ் மேற்கு வங்க தோழர்களிடம் ஆற்றிய உரையின் ஒரு சிறிய பகுதியை இங்கு வழங்குகிறோம்]*

ஒரு கட்சியின் குணாம்சத்தைத் தீர்மானிக்கின்றபோது பெரும்பாலோர் பாட்டாளிவர்க்க கலாச்சார விஷயத்தை கவனத்தில் கொள்வதே இல்லை. அப்படி கவனத்தில் கொள்வோரும்கூட இதை மிக முக்கியமானது எனக் கருதுவதில்லை. ஆனால் ஒரு கட்சியின் குணாம்சத்தையும், அதன் புரட்சியின் கருத்தியலையும் தீர்மானிக்கின்றபோது இதனைக் கவனத்தில் கொள்ளவேண்டியது அதிமுக்கியமாகும். ஏனெனில் புரட்சியை நடத்த வேண்டிய ஒரு கம்யூனிஸ்ட் கட்சி தாழ்ந்த, வக்கிரமான கலாச்சாரத்திற்குப் பலியாகிவிடுமானால் அக்கட்சியால் புரட்சியை வழி நடத்தவே முடியாது. அதனால்தான் மார்க்ஸ், உலகினை மாற்ற வேண்டுமெனில் முதலில் தொழிலாளர்கள் தம்மை மாற்றிக் கொள்ளவேண்டும் எனக் குறிப்பிட்டார். வெறுமனே தொழிலாளர்கள் புரட்சியை விரும்புகிறார்கள் என்பதாலேயே, அவர்கள் புரட்சிகர வார்த்தைகளை அறிந்து கொண்டுவிட்டார்கள் என்பதாலேயே, அவர்களால் உலகினை மாற்ற முடியும் என எண்ணுவது தவறு என்பதே இதன் பொருளாகும்.

உலகை மாற்றப் போகின்ற தொழிலாளர்கள் முதலில் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று மார்க்ஸ் ஏன் கூறினார்? இவ்வாறு கூற அவரைத் தூண்டிய காரணம் என்ன? தமது அன்றாடப்போராட்ட அனுபவங்களைக் கொண்டு அல்லது அறிவுத் திறமையைக்கொண்டு, தொழிலாளர்களால் 'புரட்சிகர' கோஷங்களை எழுப்ப முடிந்தால், 'புரட்சிகர' வார்த்தைகளை அறிந்து கொண்டுவிட்டால், அவர்களால் புரட்சியை துவக்குவதற்கான ஆற்றல்மிக்க தலைமையைக் கொடுக்க முடியும் என்று அவர் கூறியிருக்கலாமே! அல்ல, அது ஒருபோதும் சாத்தியமில்லை. தேவையான உயர்ந்த கலாச்சாரத் தரத்தை அதாவது பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தை அடையாமல் ஒருவரால் புரட்சியின் கருத்தியலை சரியாக மதிப்பீடு செய்யும் திறனையோ, அறிந்துணரும் திறனையோ பெற்றுவிட முடியாது. அதனால்தான் புரட்சிகர அரசியலைச் சரியாகப் பிரயோகிப்பது அல்லது செயலூக்கத்துடன் நடைமுறைப்படுத்துவது என்பதற்கு வெகுஜன புரட்சிகர போராட்டங்களில் லட்சக்கணக்கான மக்களை ஈடுபடுத்துவதன் மூலம் தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கையையே புரட்சியை மையமாக கொண்டதாக உருவாக்க வேண்டும்.

ஒவ்வொரு அதிகாரத்தைக் கைப்பற்றும் ராணுவப் புரட்சிக்கு முன்பும் கலாச்சாரப் புரட்சி அத்தியாவசியமாகும். கலாச்சாரக் களத்தில் புரட்சியை உருவாக்க வேண்டிய கட்சியின் தலைவர்களும் தொண்டர்களும் தங்களது

தொடர்ச்சி 4ம் பக்கம்

# தமிழக சட்டமன்றத்தில் ஆளுநர் வெளிநடப்பும் கட்சிகளின் நடத்தையும்

இவ்வாண்டு துவக்கத்தில் முதல் சட்டமன்ற அமர்வு ஜனவரி **9**ல் துவங்கியது. அதில் அரசாங்கத்தின் அறிக்கையை தமிழக ஆளுநர் வாசித்தபோது, சில பகுதிகளை வேண்டுமென்றே தவிர்த்தார். அதனால் அவர் ஆங்கில உரை முடிந்து தமிழாக்கம் வாசிக்கும்போதே முதல்வர் ஸ்டாலின் விரைவாக ஒரு தீர்மானத்தைத் தயாரித்தார். தமிழாக்க வாசிப்பு முடிந்ததும் அதை முதல்வர் அவையில் முன்மொழிந்தார். ஆளுநர் வாசித்த உரையை அவைக்குறிப்பிலிருந்து நீக்கி முன்பே தயாரித்து சுற்றுக்கு வழங்கப்பட்ட அதிகாரப்பூர்வ அறிக்கையை மட்டுமே அவைக்குறிப்பில் இடம்பெற வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முதல்வர் தீர்மானம் வாசிக்கும்போதே அதன் நோக்கம் அறிந்து ஆளுநர் விரைந்து வெளியேறியதையும், வெளியேறும்போது அவை உறுப்பினர்கள் நடந்துகொண்ட விதத்தையும் ஊடக வாயிலாக மக்கள் கண்ணுற்றனர். இந்த நிகழ்வு பல்வேறு அரசியல் கண்ணோட்டங்களிலிருந்து விமரிசிக்கப்பட்டதையும் மக்கள் கவனித்தனர்.

குறிப்பாக, அறிக்கையில் இருந்த 'திராவிட மாடல்', தமிழ்நாடு', 'அண்ணல் அம்பேத்கார், தந்தை பெரியார், காமராஜர்...' போன்ற சொற்களை வேண்டுமென்றே கவர்னர் தவிர்த்தார் என்ற குற்றச்சாட்டை ஆளும் திமுகவும் அதன் கூட்டணிக் கட்சிகளும் வைத்தன. ஆளுநரோ, அறிக்கையில் முதலீட்டை ஈர்ப்பதில் தமிழகம்தான் முதல் மாநிலமாக இருக்கின்றது, கொரொனா தொற்று நோயை எதிர்த்துப் போராடியதில் மத்திய அரசாங்கத்தின் பங்கை குறிப்பிடவில்லை போன்ற, அவரைப் பொறுத்தவரை சில உண்மைக்குப் புறம்பான கருத்துக்கள் இருப்பதாலும், திராவிட மாடல் என்றால் என்ன என்ற கோட்பாடு விளக்கம் இதுவரை அரசாங்கம் வழங்கவில்லை என்பதாலும் அவற்றை அந்நேரத்தில் தவிர்த்ததாகக் கூறினார். அப்படியெனில் அறிக்கையின் நகலை கவர்னர் பெற்றபோதே திருத்தங்களைச் செய்திருக்க வேண்டும், மாறாக அதிகாரப்பூர்வமாக அவையில் சுற்றுக்கு விட்டபின் அறிக்கையில் மாற்றங்களோ, சில பகுதிகளைத் தவிர்ப்பதோ மரபு அல்ல என்றும் விமரிசனங்கள் எழுந்தன. அரசாங்கம் அளிக்கும் அறிக்கையை ஆளுநர் அப்படியே வாசிப்பதுதான் சரி என அரசியல் அமைப்புச் சட்ட நிபுணர்களும் கூறுகின்றனர். அரசியல்சாசன அத்தாரிடியாக நடந்துகொள்ளாமல் தான் சார்ந்த கட்சியின் அரசியல் கொள்கையின்படி ஆளுநர் செயல்படுகிறார் என திமுகவும் அதைச் சார்ந்த கட்சிகளும் குற்றம் சாற்றுகின்றன. எனவே, முதல்வர் ஸ்டாலின் துணிச்சலுடன் தீர்மானத்தை நிறைவேற்றினார் என அக்கட்சியினர் பாராட்டவும் செய்தன.

மக்களால் தேர்தெடுக்கப்பட்ட கட்சிகளின் மாநில அரசாங்கங்களில், எதிர்க் கட்சியாக இருக்கும் கட்சி மத்திய அரசாங்கத்தில் இருக்கும்போது, அதனால் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் வரம்புமீறி குறுக்கிடுவதும் சட்ட ஒழுங்கு சரியில்லை, நாட்டின் ஒற்றுமைக்கு ஆபத்து போன்ற

தொடர்ச்சி 7ம் பக்கம்

# புதுக்கோட்டை மாவட்ட வேங்கைவயல் சம்பவமும் மாநில அரசாங்கத்தின் அலட்சியப் போக்கும்

**புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் கிராமத்தில் மக்களின் உயிர் ஆதாரமான குடிநீர் மேல்தொட்டியில் மலம் (விஷம்) கலந்த, அநாகரிக, இழிச் செயலை ஜனநாயக எண்ணங்கொண்ட அனைவரும் ஓரே குரலில் கண்டிக்க வேண்டும்**

கடந்த டிசம்பர் மாத இறுதியில் பட்டியலின மக்கள் வசிக்கும் வேங்கைவயல் கிராமத்தில் குழந்தைகள் உள்ளிட்ட பலருக்கும் உடல்நலக் கோளாறால் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டு ரத்தப் பரிசோதனை செய்ததில் அவர்கள் குடித்த நீரில் தான் பிரச்சினை என்பது தெரிய வந்துள்ளது. அந்த பகுதியிலுள்ள குடிநீரில் துர்நாற்றம் வீசியதால் குடிநீர் மேல்நிலை தொட்டியை பார்வையிட்டபோது அத்தொட்டியில் மலம் கலக்கப்பட்டிருந்ததைக் கண்டு அப்பகுதி மக்கள் கடும் அதிர்ச்சியடைந்தனர். பொதுமக்கள் குடிக்கும் தண்ணீரில் மலத்தைக் கலந்த செயலைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாகக் கைது செய்து, அவர்கள்மீது கொலை முயற்சி வழக்கு பதிவுசெய்து கடும் தண்டனை வழங்க வேண்டும். ஆனால் சம்பவம் நடைபெற்று ஒரு மாதம் ஆன பிறகும் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட அந்த கிராமமக்கள் மலம் கலந்த குடிநீரைப் பருகிவிட்டோமே என்ற அதிர்ச்சியில் உள்ளனர். உளவியல்ரீதியாக அவர்கள் மனநிலை எவ்வளவு கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளனர் என்பதை சொல்லத் தேவையில்லை. இந்த நிலையில் குற்றவாளிகளை விரைந்து கைது செய்து உரிய தண்டனை வழங்குவதையும், அந்த மக்களின் வேதனையை தீர்த்து அவர்கள் கௌரவமாக வாழ்வதற்குரிய வழிவகைகளை செய்யவேண்டியதும் தமிழக அரசாங்கத்தின் கடமையாகும். நிலைமை இயல்பாகும்வரை அப்பகுதிகளில் உள்ள அனைத்து குடிநீர்த் தொட்டிகளையும் கண்காணிக்க உரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

இன்றைய முதலாளித்துவ ஆட்சியாளர்களின் மக்கள் விரோத கொள்கைகளால் விலைவாசி உயர்வு, வேலையின்மை என பல்வேறு வகையில் இன்று அனைத்து தரப்பு மக்களும் கடும் பாதிப்புக் குள்ளாகின்றனர். அதிலும் விளிம்பு நிலை மக்கள் கடும் உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாவது மட்டு மின்றி இதுபோன்ற பல்வேறு கொடுந்தாக்கு தலுக்கும் ஆளாகின்றனர். அவ்வாறு பாதிக்கப் படும் மக்கள் ஒன்றுபட்டுவிடக்கூடாது என்பதற்காக அவர்களிடையே சாதி, மதம், மொழி, இனம் என பல்வேறு பிரிவினைகளைத் தூண்டிவிட்டு அவர்களது ஒற்றுமையை முதலாளித்துவ வர்க்கமும் அவர்களுக்கு அடிவருடி சேவகம் செய்யும் முதலாளித்துவ கட்சிகளும் அமைப்புகளும் ஈடுபட்டு வருகின்றன.

வாக்கு வங்கி அரசியல் நடத்தும் பிரதான முதலாளித்துவ கட்சிகளும் எந்த ஜாதிக்கு எத்தனை வாக்கு என்ற அடிப்படையில் செயல்பட்டு அந்த மக்களிடம் பிளவை ஏற்படுத்தி, அப்பிளவை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றன. மக்களிடையே ஏற்றத்தாழ்வு கற்பித்து வன்மத்தை விதைக்கும் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்திற்கு சேவகம் செய்யும் சக்திகளின் சதித்திட்டத்திற்கு பலியாகிவிடாது விழிப்புடன் இருக்குமாறு அனைத்து தரப்பு மக்களுக்கும் நாம் அறைகூவல் விடுக்கிறோம். மத்திய, மாநில அரசாங்கங்களின் மக்கள் விரோத கொள்கைகளை முறியடிக்க வேண்டிய தேவை உள்ள நிலையில் உழைக்கும் மக்கள் தம் ஒற்றுமையை பேணிக் காக்கவேண்டியது தற்போது மிகவும் அவசியமாகும்.

இத்தகைய கொடூர செயலில் ஈடுபட்டவர்கள் மீதும், அதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க மாநில அரசாங்கத்தை ஜனநாயக சிந்தனை கொண்ட அனைத்து தரப்பு மக்களும் வலியுறுத்த முன்வரவேண்டும் ■

# மத்திய, மாநில அரசாங்கங்களின் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்து வலிமைமிக்க விவசாயிகள் இயக்கத்தை உருவாக்குவீர்!

**மார்ச் 11 – 14, 2023 தேதிகளில் கொல்கத்தா மற்றும் ஜாய்நகரில் நடைபெறவிருக்கும் அகில இந்திய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஏஐகேகேஎம்எஸ் (AIKKMS) இன் 3வது அகில இந்திய மாநாட்டை மாபெரும் வெற்றியடையச் செய்வீர்!**

பன்னாட்டு நிறுவனங்களின் நலனைக் காக்க வகுக்கப்பட்டுவரும் மத்திய பாஜக அரசாங்கத்தின் விவசாயிகள் விரோதக் கொள்கைகளை நாம் அனைவரும் அறிவோம். இந்தத் தாக்குதல்களால் சாமானிய மக்களின் வாழ்வில் ஒரு பரிதாப கரமான நிலை உருவாகியுள்ளது. உரம், பூச்சிக் கொல்லி மருந்து, விதைகளின் விலையேற்றம் ஏற்பட்டுள்ளது. டீசல், மின்சாரம் அபரிமிதமாக அதிகரித்து வருகிறது. ஆனால், விவசாயிகளுக்கு அவர்களின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. இதனால், கடன் சுமையால் விவசாயிகள் தற்கொலைப் பாதைக்கு தள்ளப் பட்டுள்ளனர். பன்னிரண்டு நிமிடங்களுக்கு ஒரு விவசாயி நம் நாட்டில் தற்கொலை செய்து கொள்கிறார் எனக் கூறப்படுகிறது. கிராமப்புறத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை. எனவே அவர்களின் அன்றாட வாழ்வில் பசி என்பது ஒரு சாதாரண அன்றாட விஷயம் என ஆகிவிட்டது என்பதை நாம் காணலாம். எவ்வளவு கடுமையான நெருக்கடியில் அவர்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர் பாருங்கள்!

இந்த நெருக்கடிகளுக்கு மத்தியில், ஒரு மிக முக்கியமான விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். அதுதான் விவசாயிகள் மத்தியில் உருவாகியிருக்கும் அந்த போராட்ட மனப்பான்மை. மேற்கு வங்காளத்தில் சிபிஐ(எம்) தலைமையிலான அரசு நிலத்தை அபகரிக்க முயன்றபோது விவசாயிகள் மத்தியில் அந்த போராட்ட மனப்பான்மையை நாம் பார்த்திருக்கிறோம். டாடா, சலீம் போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் நலனுக்காக சிங்கூர் மற்றும் நந்திகிராமில் உள்ள விவசாயிகள் அரசாங்கத்தின் அடக்குமுறையை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. அதன்பின்னர் விவசாயிகள் எழுச்சியடைந்து வீரத்துடன் போராடி சிபிஐ(எம்) அரசாங்கத்தை அடிபணிய வைத்தனர்.

அதன்பின் பல்வேறு மாநிலங்களில் உள்ள விவசாயிகள் அந்த முன்மாதிரியைப் பின்பற்றி போராட்ட வலிமையைக் கட்டமைத்துக்கொண்டனர். நாடு முழுவதும் விவசாயிகள் இயக்கம் ஆங்காங்கே நடைபெற்றவண்ணம் இருந்தது. சமீபத்தில் தில்லி எல்லையில் விவசாயிகள் முன்னெடுத்த ஓர் வீரம் செறிந்த போராட்டத்தைப் பார்த்தோம். மூன்று கருப்பு பண்ணை சட்டங்களை ரத்து செய்ய, எழுநூறுக்கும் மேற்பட்ட இன்னுயிர்களைத் தியாகம் செய்து பன்னாட்டு நிறுவனங்களின் மேனேஜர்களாக இயங்கிவரும் பாசிச மத்திய பாஜக அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து அதில் வெற்றி கொண்டனர். நமது நாட்டின் ஜனநாயக இயக்க வரலாற்றில் நிகரில்லாத போராட்டமாக அது அமைந்தது. அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கமான ஏஐகேகேஎம்எஸ் ஒரு முக்கியமான பாத்திரத்தை அதில் வகித்தது என்பதை இங்கு பெருமையுடன் குறிப்பிடலாம்.

ஏஐகேகேஎம்எஸ் அமைப்பின் நிறுவனர் மற்றும் இவ்வமைப்பின் உத்வேகத்தின் ஆதாரமாக திகழ்ந்து கொண்டிருக்கும் பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரான தோழர் சிப்தாஸ் கோஷ், நெருக்கடியில் சிக்கிய முதலாளித்துவம் உழைக்கும் மக்கள் மீதான தாக்குதலை மேலும் மேலும் தீவிரப்படுத்தும் என்று அன்றே நமக்குக் கற்பித்தார். விவசாயிகளின் போராட்டத்தை ஒரு உயர்ந்த நிலைக்கு கொண்டுசெல்ல தேவையான படிப்பினைகளை வழங்கிச் சென்றுள்ளார். இந்த தேவையை நிறைவேற்ற ஏஐகேகேஎம்எஸ் தன்னை மேலும் மேலும் செழுமைப்படுத்தி வலுப்படுத்திக்கொள்ள வேண்டிய சூழலில்தான் அது தனது 3வது அகில இந்திய மாநாட்டை நடத்த இருக்கிறது.

இந்த மகத்தான சந்தர்ப்பத்தில், "விவசாயம் மற்றும் விவசாயிகள் இயக்கத்தின் மீதான பன்னாட்டு நிறுவனங்களின் தாக்குதல்கள்" என்ற தலைப்பில் மேற்கு வங்கத்தின் ஹவுரா நகரின் சரத் சதன் அரங்கில் ஒரு சர்வதேச கருத்தரங்கை ஏற்பாடு செய்திருக்கிறது. அதில் அமெரிக்கா, நேபாளம் மற்றும் வங்காளதேசத்தைச் சேர்ந்த முக்கிய விவசாயத் தலைவர்கள் எஸ்கேஎம் தலைவர்கள் தங்கள் மதிப்புமிக்க கருத்தை நம் முன் வைப்பார்கள்.

பிரதிநிதிகள் அமர்வில், சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் உரையாற்றவிருக்கிறார். இருபத்தைந்து மாநிலங்களில் இருந்து 800க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் அம்மாநாட்டில் பங்கேற்று எதிர்காலப் போராட்டத்தை முடிவு செய்வார்கள்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த அகில இந்திய மாநாட்டை மாபெரும் வெற்றியடையச் செய்வீர்! ■

# தோழர் லெனின் 99வது நினைவுதினம்




**சென்னையில் மாநிலச் செயலாளர் தோழர் ஆ ரெங்கசாமி செவ்வணக்கம்**

**தேனி, மதுரை, விழுப்புரம், சேலம், நெய்வேலி ஆகிய இடங்களிலும் ஜனவரி 21, 2023 லெனின் நினைவுதினம் அனுசரிப்பு**

# பணமதிப்பு நீக்கம் மக்கள் மீதான மோசடி என்பது மீண்டும் அம்பலம்

ஜனவரி 2, 2023 அன்று 5 உறுப்பினர் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வின் 4 உறுப்பினர் பெரும்பான்மையானது பணமதிப்பு நீக்கத்திற் கெதிரான மனுவை தள்ளுபடி செய்தது. அம் முடிவு மேற்கொள்ளப்பட்டதில் எவ்வித தவறும் இல்லை எனவும் முடிவு செய்தது. 6 வருடங்களுக்கு முன்பு மேற்கொள்ளப்பட்ட அந்நடவடிக்கை தன் நோக்கத்தை சாதித்துவிட்டதா இல்லையா என்பது பொருத்தமற்றது எனவும் அப் பெரும்பான்மை தீர்ப்பு கூறியது. இருந்தபோதிலும், இந்திய ரிசர்வ் வங்கி சட்டத்தின் பிரிவு 26(2)ன் கீழ் 500, 1,000 ரூபாய் நோட்டுக்களை சட்ட நடவடிக்கையின் மூலமே தடைசெய்யமுடியும், அரசு அறிவிப்பின்மூலம் தடைசெய்ய மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை என நீதிபதி நாகரத்னா மாறுபட்ட தீர்ப்பு வழங்கியுள்ளார்.

பணமதிப்பு நீக்கம் குறித்த சட்டத்தை பாராளுமன்ற விவாதித்திருக்க வேண்டும். அரசு அறிவிப்பாணைமூலம் இந்த நடைமுறை செய்யப்பட்டிருக்க வேண்டும். இது போன்ற நாட்டின் மிக முக்கியப் பிரச்சினையில் பாராளு மன்றத்தை தூர விலக்கி வைக்கமுடியாது. ரிசர்வ் வங்கியின் தன்னிச்சையான ஈடுபாடு இவ்விஷயத் தில் இருக்கவில்லை. அதன் அபிப்பிராயம் மட்டுமே கேட்கப்பட்டது. இவ்வாறு அபிப்பிராயம் கேட்பது ரிசர்வ் வங்கியின் பரிந்துரை என சொல்ல முடியாது என அவர் கூறினார். ஒரு முறைமை எனும் அம்சத்தில்கூட ஒத்தகருத்து ஏற்படவில்லை.

## பணமதிப்பு நீக்கம் குறித்த நோக்கத்தை மாற்றிக்கொண்டேயிருக்கும் பாஜக அரசாங்கம்

பணமதிப்பு நீக்கம் குறித்து அறிவித்த நவம்பர் 8, 2016 அன்றைய பிரதமர் உரையில், கருப்புப் பணத்தை வெளிக்கொணர்வது, தீவிரவாதத்திற் கான நிதியுதவியை தடுப்பது, கள்ள நோட்டுக்களை கைப்பற்றுவது குறித்துதான் பேசினார். குறிப்பாக, “கருப்புப் பணம்” என்கிற வார்த்தையை 18 முறை உபயோகப்படுத்தினார். டிஜிட்டல் பணபரிவர்த்தனை அல்லது ரொக்கமில்லா பொருளாதாரம் என்ற வார்த்தைகளெல்லாம் அவரது அந்த உரையில் பயன்படுத்தப்படவேயில்லை.

நவம்பர் 27, 2017 அன்று பிரதமர், இந்த 500, 1,000 ரூபாய் நோட்டுக்களை தடைசெய்ததானது பணப் பரிவர்த்தனைகளில் மற்றபிற வாய்ப்புக் களையும் திறந்துவிட்டுள்ளது, வங்கிச் செயலிகளை பதிவிறக்கம் செய்வது, இபேமண்ட் போன்ற வாய்ப்புகள் துவங்கியுள்ளன. கடைக்காரர்கள் கார்ட் ஸ்வைப்பிங் வசதியை தற்போது பயன்படுத்திக் கொள்ளலாம். பாதுகாப்பான பணம் செலுத்தும் முறையான கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு போன்றவற்றை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார். 100% ரொக்கமில்லா சமுதாயம் இல்லாவிட்டாலும், இந்தியாவை குறைந்தளவு ரொக்க பரிவர்த்தனை கொண்ட சமுதாயமாக மாற்றலாம் என்றார். அந்த உரையில், கருப்புப் பணம் என்ற வார்த்தையை ஒருமுறை பயன்படுத்தினால், ‘டிஜிட்டல் ரொக்கமற்ற’ என்ற வார்த்தைகளை மூன்றுமுறை பயன்படுத்தினார். அதேநேரம் கள்ளநோட்டுகள் குறித்து எதுவும் பேசவில்லை.

அப்போதைய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி அவர்களும் பணத்தை பறிமுதல் செய்வது அரசாங்கத்தின் நோக்கமல்ல, கரண்சி நோட்டுக் களை திறம்பட பயன்படுத்தும் நோக்கில் குறிப் பிடப்பட்ட அனைத்து ரூபாய் நோட்டுகளும் (SBNs- Specified bank notes) வங்கி அமைப்புக்குள் வரவேண்டுமென்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்றார். இது எவ்வளவு அபத்தமானது. அது உண்மையென்றால், அதற்குப் பின்பு வந்த பல்வேறு அறிவிப்புகளின் பின்னணியைப் புரிந்துகொள்ள முடியவில்லை. 11 ஜனவரி 2017ல், பாராளுமன்ற குழு முன்பு கூறுகிறார்: பணமதிப்பு நீக்கத்திற்கு பிறகு ‘குறிவைக்கப்பட்ட சந்தேகத்திற்கிடமான டெபாசிட்டுகளால் வரி அடித்தளம் விரிந்து ஆழமாக வாய்ப்புள்ளது’. அவர் மேலும் கூறினார்: ‘வெளிப் படைத் தன்மையை அதிகரிக்கவும் அமலாக்கத்தை வலுப்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளோடு பணமதிப்பு நீக்க நடவடிக்கை நீடித்த துரிதமான பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும்’ 13 பிப்ரவரி 2017ல் அருண் ஜெட்லி கூறுகிறார்: ‘மிகப்பெரிய, சுத்தமான, உண்மையான ஜிடிபியை அடைய மேற்கொள்ளப் படும் தொடர் முயற்சிகளுல் பணமதிப்பு நீக்க நடவடிக்கை என்பது மிகவும் துணிச்சலான தீர்க்கமான நடவடிக்கையாகும்.’ 23 ஜூலை 2017 அன்று அவர் கூறுகிறார் ‘சரக்கு மற்றும் சேவை வரியை அமல்படுத்திய பிறகு அதோடு பணமதிப்பு நீக்க நடவடிக்கையானது ரொக்கத்தை உருவாக்குவதை மிகவும் கடினமாக்கும், இணங்கி நடத்தலுக்கும் மின்னணு பரிவர்த்தனையை அதிகரிப்பது என்ற நோக்கத்திற்கும் இது உதவும்.’

2017 நவம்பர் 25ம் தேதி பஞ்சாப் மாநிலம் பதின்தாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் “நான் ஏழை, நடுத்தர மக்களின் உரிமைகளை பாதுகாக்க விரும்புகிறேன். பள்ளிகளில், மருத்துவமனைகளில், நிலம் வாங்கும்போது மக்கள் லஞ்சம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். கருப்புப்பணத்தையும் ஊழலையும் ஒழிக்கும் போராட்டத்தில் ஆதரவளித்தமைக்காக மக்களுக்கு நான் நன்றி கூறுகிறேன்” என்றார். 2017, ஜனவரி 31ம் தேதியன்று அரசாங்கத்தின் முதன்மை ஆலோசகரான அரவிந் சுப்பிரமணியன், ரியல் எஸ்டேட் விலைகளை குறைப்பதே பணமதிப்பு நீக்கத்தின் நோக்கம் என்றார். 2017, ஏப்ரலில் மறைந்த அருண் ஜெட்லி அவர்கள், மின்னணு பரிவர்த்தனையும் பணப்புழக்க முறையில் மாற்றமுமே நோக்கம், கருப்புப் பணத்தை பறிமுதல் செய்வதல்ல என்றார். அப்படியானால் பணமதிப்பு நீக்கத்தின் நோக்கம் ஊழலை ஒழிப்பதில்லையா? கள்ளப் பொருளாதாரத்தை தகர்த்து கருப்புப் பணத்தை மீட்பதற்காக இல்லையா? இந்தியாவை மின்னணு பொருளாதாரத்திற்குள் தள்ளு வதற்காகத்தானா? இதுதான் தீவிரவாதத்தை, கடத்தலை, இன்னும் இதுபோன்ற கடுமையான குற்றங்களைக் கையாளும் விதமா? இல்லை, இந்திய பொருளாதாரத்தை மாற்றி அமைப்பதற்கும் அரசியலுக்கு நிதியளிக்கும் வழிவகைகளை மாற்றியமைக்கும் முயற்சியா? இதுபற்றி எந்த ஒரு தெளிவான விளக்கமுமில்லை.

இலக்கை மாற்றிக்கொண்டே அரசாங்கம் சென்றதிலிருந்தே பணமதிப்பு நீக்கம் உண்மை யிலேயே என்ன செய்துள்ளது என்பதை காட்டுகிறது. உத்தரகாண்ட் மாநிலம் டேராடூனில் 27 டிசம்பர் 2016 அன்று நடைபெற்ற பேரணியில் பிரதமர் மோடி உரையாற்றும்போது ‘8 நவம்பரில் எடுத்த ஒரே ஒரு நடவடிக்கையின்மூலம் தீவிர வாத உலகம், போதைப்பொருள் மாஃபியாக்கள், மனித கடத்தல், கள்ளநோட்டு, கடத்தல் என அனைத்தும் ஒழிக்கப்பட்டுவிட்டது’ என்று கூறினார். இரண்டு நாட்கள் கழித்து ஒரு பேட்டியில்: ‘தீவிரவாதிகள், மாவோயிஸ்டுகள், இதர பயங்கரவாதிகளிடமிருந்த ரொக்கமானது காலி செய்யப்பட்டுவிட்டது. மிகவும் அபாய கரமான, மிகவும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஆட்கடத்தல், போதைப்பொருள் கடத்தல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகள் முடக்கப்பட்டு விட்டது.’ ஆனால் அவர் கூறியவை எதுவுமே உண்மையல்ல என்பதை தரவுகள் அம்பலப்படுத்தி யுள்ளன. நாட்டில் ரொக்கப்பணப் புழக்கம் 8 நவம்பர் 2016க்குப் பிறகு 83% அதிகரித்துள்ளது, பணமதிப்பு நீக்க நடவடிக்கை எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதை இது காட்டுகிறது. 4 நவம்பர் 2016 அன்று ரூ17.74 லட்சம் கோடியாக இருந்த ரொக்க பணப்புழக்கம் 23 டிசம்பர் 2022ல் ரூ32.42 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது என்பதை ரிசர்வ் வங்கியின் தரவுகளை சுட்டிக்காட்டி பிடிஐ தெரிவித்துள்ளது.

31 மார்ச் 2022ல் ரூ31.33 லட்சம் கோடிகள் புழக்கத்தில் இருந்த நிலையில் டிசம்பரில் 2022 மேலும் அதிகரித்துள்ளதையும் இது காட்டுகிறது. மார்ச் 2017ல் நாட்டில் ரொக்கப் பணப்புழக்கம் ரூ13.1 லட்சம் கோடிகள் என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்திருந்தார். அது பணமதிப்பு நீக்க செய்யப்பட்ட நவம்பர் 2016ல் இருந்ததைக் காட்டிலும் 20% குறைவாகும். ஆனால் மார்ச் 2018ல் அது 37.67% அதிகரித்து ரூ18.03 லட்சம் கோடிகளாக உயர்ந்துள்ளது. இந்த நடவடிக்கையால் கள்ள நோட்டுக்கள் ஒழிக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்தது. ஆனால் ரூ400 கோடி மதிப்பிலான கள்ள நோட்டுக்கள் புழக்கத்தில் இருப்பதாக ஆர்பிஐ கணித்துள்ளது. மார்ச் 2022ல் இருந்தத்தைக் காட்டிலும் மின்னணுப் பரிவர்த்தனை ஏப்ரல் 2022ல் 27% குறைந்துள்ளதை ஆர்பிஐ தகவல்கள் தெரிவிக் கின்றன. இந்தியாவில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என 2 முதல் 6.5 கோடி பேர் பல்வேறு காரணங்களுக்காகக் கடத்தப்படுவதாக அதிகாரப் பூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. இது ஆட் கடத்தல் அதிகரித்துள்ளதை அம்பலப்படுத்துகிறது.

தினசரி பத்திரிகை செய்திகளைப் பார்த்தாலே நாட்டில் ஊழல் அதிகரித்துள்ளதை தெரிந்து கொள்ளலாம். 2021ல் ஊழல் குறியீட்டில் 180 நாடுகளில் இந்தியா 85வது இடத்தில் இருந்தது. இன்றைய முதலாளித்துவ பாராளுமன்றவாத அரசியலில் ஊழல் என்பது பட்டவர்த்தனமாக நடைபெறுகிறது. உதாரணத்திற்கு தேர்தலில் ஒவ்வொரு வேட்பாளரும் எவ்வளவு செய்யலாம் என்று ஒரு உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதைக் காட்டிலும் பல மடங்கு, பலகோடிகள் தேர்தலில் செலவழிக்கப்படுகிறது. அந்த செலவை ஈடுகட்டுவதற்கு ஏராளமான முறைகேடுகளிலும் ஈடுபடுகின்றனர். இவை யெல்லாம் கருப்புப் பணமில்லையா? தேர்தலுக்கு நிதி வழங்குவதும் வெளிப்படைத்தன்மையாக இல்லை, இதனால் கருப்புப்பணம் தேர்தல் நிதியாக அளிக்கப்பட்டு வெள்ளைப் பணமாக்கப்பட வில்லையா? அதிகார வெறிபிடித்த அரசியல் வாதிகளும் லாபவெறிபிடித்த கார்ப்பொரேட்டு களும் கூட்டுச் சேர்வது ஊழலில்லையா? நமது நாட்டில் அரசியல் என்பதே கிரிமினல்மயமாகி விட்டது. மோடியின் ஆட்சியில் தீவிரவாத சம்பவங்கள் 176% அதிகரித்துள்ளன. காஷ்மீர் பிராந்தியத்தில் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கை களை எடுத்த ஆண்டாக 2022 திகழ்கிறது என்று கடந்த 31 டிசம்பர் அன்று ஜம்மு காஷ்மீர் போலீசார் தெரிவித்தனர். அப்படியானால் தீவிரவாத குறைந்துவிட்டது என்று எப்படிக் கூறுகின்றனர்? நாட்டில் மின்னணு பணப்பரிவர்த்தனை அதிகரித்துள்ள போதிலும் இன்னமும் ரொக்கப் பரிவர்த்தனைகளைத்தான் லட்சக்கணக்கான மக்கள் மேற்கொள்கின்றனர் என்று ஆர்பிஐ ன் ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

இரண்டாவதாக சைபர் குற்றங்கள் அதிகரித்து விட்டன. எனவேதான் மக்கள் கவனமாக இருக்க வேண்டும் என்று அரசாங்கங்களும் வங்கிகளும் தொடர்ந்து எச்சரிக்கின்றன. கடன் மற்றும் கிரெடிட் அட்டை மோசடிகள் அதிகரித்துவிட்டன. இதுதான் டிஜிட்டல் இந்தியாவா? பள்ளிகளில் தங்கள் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு நன்கொடைகள் என்ற பெயரில் லட்சக்கணக்கான பணத்தை லஞ்சமாக பெற்றோர் வழங்குகின்றனர். கிராமப் புறங்களில் 37% குழந்தைகள் பள்ளிக்கு செல்ல வில்லை என்று ஒரு ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. முன்னணி 6 நகரங்களில் ரியல் எஸ்டேட் விலை இந்த ஆண்டு 6 முதல் 10% அதிகரித்துள்ளது. மூலப்பொருட்கள், உழைப்பும் மற்றும் நில மதிப்புகளால் அடுத்த ஆண்டு மேலும் 3 முதல் 5% அதிகரிக்குமாம். பணமதிப்பு நீக்க நடவடிக் கையை மேற்கொள்ள மத்திய அரசாங்கத்திற்கு உரிமை உண்டு என தொழில்நுட்ப ரீதியாக வேண்டுமானால் தவறில்லை என்று நீதிமன்றம் கூறியிருக்கலாம். ஆனால் அந்த நடவடிக்கையால் அரசாங்கத்தின் தரப்பில் பிரதமர், நிதியமைச்சர், அதிகாரிகள், அந்த கட்சியின் தலைவர்கள் தெரிவித்த எந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப் படவில்லை என்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அது முழுக்க முழுக்க நியாயமற்றது என்பது, அதாவது திட்டமிட்ட முறைகேடானது என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணமாகியுள்ளது.

எனவேதான் ஊழலுக்கும் பயங்கரவாதத்திற்கும் எதிரான போர் என்ற போர்வையில் கொண்டு வரப்பட்டதும், 150 அப்பாவி உயிர்களைக் காவு வாங்கிய, மக்கள் வாழ்க்கையில் நாசத்தை ஏற்படுத்திய, தினக்கூலிகள், சிறு தொழில்களின் வாழ்க்கையை முடக்கியதுமான பணமதிப்புநீக்க நடவடிக்கையினால் என்ன நடந்தது என்பது குறித்து பாஜக தலைமை வாய்திறக்க மறுக்கிறது.

13 நவம்பர் 2016ல் பிரதமர் மோடி அவர்கள் கூறியதை நினைவுபடுத்த விரும்புகிறோம்: ‘எனக்கு 50 நாள் கொடுங்கள். டிசம்பர் 30க்குப் பிறகு எனது செயலில் குறைபாடு இருந்தாலோ, எனது பணியில் தவறுகளோ மோசமான நோக்கமோ கண்டறியப்பட்டாலோ, எனக்கு இந்த நாடு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்வேன். தேவைப்பட்டால் என்னைத் தூக்கிலிடலாம்’.

இப்போது பிரதமர் என்ன கூறப்போகிறார்? ■

## பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தை . . .

# தனிச் சொத்துடைமையின் வரலாறு, அநீதியின் அடக்குமுறையின் வரலாறு

1ம் பக்கத் தொடர்ச்சி

தனிப்பட்ட பழக்க வழக்கங்கள், ரசனைகள், கண்ணோட்டம் மற்றும் நடத்தையில் கேடுகெட்ட முதலாளித்துவ கலாச்சாரத்திற்கு தாங்களே பலியாகிப்போயிருந்தால் அவர்களால் ஒருபோதும் புரட்சியை நிறைவேற்ற முடியாது. 'கம்யூனிஸ்ட்' என்ற பெயரைத் தாங்கிய கட்சிகள் எதுவுமே, கட்சிக்குள் இதுவரை இதுகுறித்து எந்த கவனமும் செலுத்தவில்லை. தொண்டர்களின், குறிப்பாக தலைவர்களின் கண்ணோட்டத்தை மாற்று வதற்கும், கலாச்சாரத் தரத்தினை உயர்த்துவதற்கும் போராட்டங்களை நடத்துவதில் இதுவரை எந்தக்கவனமும் செலுத்தவில்லை. இவ்வாறாக அவர்கள் மக்களை மட்டுமன்றி, அப்பாவித் தொண்டர்களின் தியாகத்தை மூலதனமாக்கி அமைச்சர்களாகவும் பிற பயன்கள் அனைத்தையும் பெற்றுக்கொண்டு அத்தொண்டர்களையும்கூட ஏமாற்றி விட்டனர். மன்னிக்க வேண்டும் இப்படிக் கூறுவதை நான் தவிர்க்கமுடியாது.

பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரக் கட்சி என்பது அடிப்படையில் தன் வர்க்க நலன்களை, அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சாரம் என்ற அனைத்து நலன்களையும் நிறைவேற்று வதற்கான ஒரு கருவி என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். அது பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படை என்று லெனின் குறிப்பிட்டார். அதாவது அதுவே பாட்டாளி வர்க்கத்தின் மிகவும் விழிப்புணர்வு கொண்ட, புரட்சிகர மையக் கருவாகத் திகழும் ஸ்தாபனமாகும்.

அதனால்தான் பாட்டாளி வர்க்க புரட்சிகரக் கட்சியின் தலைவர்களெல்லாம் பாட்டாளிவர்க்க கலாச்சாரத்தின் மாணிக்கங்களாவர். அவர்கள் தமது தனிப்பட்ட வாழ்க்கையானாலும் சரி, அல்லது சமூக இயக்கங்களை நடத்தும் போதும் சரி, பழக்க வழக்கங்களில் நடை உடை பாவனைகளில் மற்றும் வாழ்க்கைப் பாணியிலும் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தை, பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்க வேண்டாமா? பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தின் சாராம்சம்தான் என்ன? கம்யூனிஸ்ட் தொண்டர்களும் தலைவர் களும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தைக் கைவரப் பெற்றுள்ளனரா என்பதற்கான அக்னிப் பரிட்சை அவர்கள் உண்மையில் தம்மை அனைத்து விதமான தனிச் சொத்து மனப்பான்மையிலிருந்து விடுவித்துக் கொள்ள முடிந்திருக்கிறதா இல்லையா என்பதேயாகும். அவர்களின் கலாச்சாரக் கண்ணோட்டம், அறநெறி ரசனைகள், மற்றும் அன்றாட நடை உடை பாவனைகளெல்லாம் தனிச்சொத்து மனப்பான்மையிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும், வேறு வார்த்தைகளில் கூறினால் பூர்ஷ்வா தனிமனிதவாத சிந்தனைச் செயல்முறைப் போக்கின் ஆதிக்கத்திலிருந்து முற்றிலும் விடுபட்டுவிட்டார்களா என்பதையே இதன்மூலம் நான் குறிப்பிடுகிறேன். அதனால்தான் கம்யூனிசம் குறித்து மார்க்ஸ், அது 'தனிச்சொத்து நீக்கப்பட்ட மனிதநேயம்' என வரையறை செய்தார். ஆக, ஒரு புரட்சிகர பாட்டாளியாக அல்லது கம்யூனிஸ்டாக ஆவதற்கான போராட்டம் முதலாவதாக, உழைக்கும் மக்களின் புரட்சிகர இயக்கங்களில் நேரடியாகவும் செயலூக்கத்துடனும் பங்காற்றி, அதன்மூலம் பாட்டாளிவர்க்கப் புரட்சிகர அரசியலை கிரகித்துக் கொண்டு, தனது தனிப்பட்ட நலனை எவ்வித தயக்கமுமின்றி வர்க்கத்தின், புரட்சியின், கட்சியின் நலனுக்காக மிகுந்த மனமகிழ்வோடு தானே முன்வந்து சமர்ப்பிக்கும் திறனை அளிக்கவல்ல கலாச்சார மற்றும் அறநெறித் தரத்தை கைவரப்பெறு வதற்கான முதன்மையான போராட்டமாகும்.

ஆனால் நாட்டிற்காக ஒருவரது செல்வம், சொத்துக்கள் மற்றும் வாழ்க்கையில் அனைத்தையும் தியாகம் புரிவது என்னும் முதலாளித்துவ கோட்பாடானது, குணாம்சரீதியாகவே இந்த தனிநபர் நலனை புரட்சியின் நலனுக்கு சமர்ப்பித்தல் என்பதிலிருந்து வேறுபட்டதாகும். ஆனால் இந்த தன்னலனை சமர்ப்பிக்கும் ஆர்வமானது பூர்ஷ்வா கண்ணோட்டத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கு மானால் தற்பெருமை, தனிநபர்வாதம் மற்றும் அகந்தை ஆகியனவெல்லாம் நிச்சயமாக ஊதிப்பெருத்து அவை அவர் ஒரு கம்யூனிஸ்டாக உருவாகும் பாதையில் கடுமையான தடையாக மாறிவிடும். இப்போராட்டத்தை சரியாக நடத்துதல், கம்யூனிஸ்ட் விழிப்புணர்வைக் கைவரப் பெறுவதற்கான ஒரு ஆரம்பத்தை மட்டுமே குறிக்கிறது என்பதும் இப்போராட்டத்தில் வெற்றி பெறுவதின் மூலம் மட்டுமே என்றாவது ஒருநாள் கம்யூனிஸ்ட் ஆவதற்கான திறனை ஒருவரால் பெற முடியும் என்பதும் நினைவிருக்கட்டும்.

நம் நாட்டில் கம்யூனிஸ்ட் தலைவர்கள் என்றழைக்கப்படுபவர்களின் நடத்தையில் உயர்ந்த கலாச்சாரத் தரத்தின் ஒரு சிறு அறிகுறிகூட காணப்படவில்லை. கம்யூனிஸ்டுகள் என்று அறியப்பட்ட நம் நாட்டு தலைவர்களின் நடத்தையில் இந்த உயர்ந்த கலாச்சாரத் தரத்தின் எந்த பிரதிபலிப்பையாவது நீங்கள் காண்கிறீர்களா? இக்கட்சிகளின் சாதாரணத் தொண்டர்கள் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தைக் கைவரப் பெறுவதற்கான போராட்டத்தில் இன்னும் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் காரணத்தால் நான் அவர்களைப் பற்றி இங்கு குறிப்பிடவில்லை. ஒரு புரட்சிகர பாட்டாளி வர்க்கக் கட்சியின், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களாக இருப்பதற்குரிய கலாச்சாரத் தரத்தைப் பெற்றிருக்க வேண்டிய இத்தலைவர்களில் பலர் பெருமளவு தனிச் சொத்துக்களை, அரண்மனைபோன்ற மாளிகை களை, தனியாக கார், தினசரி பயன்பாட்டிற்குத் தேவையான ஆடைகளையும் வெளிநாட்டு பயணங்களுக்கென தனியாகவும், தேநீர் விருந்துகளுக்கென தனியாகவும், மிக அதிகமான ஆடைகளை சொந்தமாகக் கொண்டுள்ளனர். ஆனால் இவர்கள் வெகுஜனங்களிடம், தொழிலாளர் களிடம், விவசாயிகளிடம் செல்லும் போது ஏதோ தன்னையே தியாகம் புரியும் சாமியார்களைப்போல சாமானியர்களின் உடை அணிந்து கொள்கின்றனர்! காந்தி முதற்கொண்டு நமது சுதேசி இயக்கத் தலைவர்களில் பெரும்பாலோர் தேசபக்திக்கு எடுத்துக் காட்டாக இடுப்புத்துணி மட்டும் அணியும் அருமையான பாரம்பரியத்தை ஏற்படுத்திவிட்டனர்!

இதைப்பற்றியெல்லாம் நம்நாட்டு மக்கள் கவலைப் படுவதில்லை, இத்தலைவர்களில் பெரும்பான்மையோரின் உண்மையான வாழ்க்கைத் தரம் எப்படிப்பட்டது என்பதை அறிந்து கொள்ள அக்கறை காட்டுவதும் இல்லை. இத்தலைவர்கள் கூட்டங்களிலும் பொது நிகழ்ச்சிகளிலும் அணிந்து வர, எத்தனை ஜோடி உடைகள் வைத்திருக்கின்றனர் என்பது குறித்தும் அறிந்துகொள்ள அக்கறை கொள்வதில்லை. இத்தனை பெரிய தலைவர் களாக இருந்தும் சாமானியனின் ஆடையில் உலா வருவதால் இவர்கள் நிச்சயமாக மிகப்பெரும் தேசபக்தர்களாகத்தான் இருக்கவேண்டும் என்று மக்கள் நினைத்துக் கொள்கின்றனர்! இன்றும் நம் நாட்டு மக்கள் விஷயங்களை இப்படித்தான் பார்க்கின்றனர். நமது நாடு, தலைவர்களிடம் குருட்டுத்தனமான நம்பிக்கை வைக்கும் ஒரு நாடாகும். தியாக வழிபாடு இந்நாட்டின் பாரம்பரியத்தில் வேரூன்றிக் கிடக்கிறது.

ஆனால் மக்களை ஏமாற்றிட இதைவிடப் பெரிய தந்திரம் வேறெதுவும் இருக்க முடியாது. முதலாளித்துவ அரசியல்வாதிகள் தங்களுக்குச் சாதகமாக மக்களின் இந்த மனோபாவத்தை இது நாள்வரையிலும் முழுமையாகப் பயன்படுத்தி வருகின்றனர். தற்போது கம்யூனிஸ்ட் என்றழைக்கப் படும் இவர்களும், மக்களை ஏமாற்றும் முயற்சியில் அதே வேஷதாரித்தனத்தைப் பின்பற்றுகின்றனர். அவர்கள் பணம் வைத்திருக்கிறார்களா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால் தலைவர்களும் கூட அதை வைத்திருப்பது சரியல்ல என்று அவர்கள் கருதாதபோது மேலும் உண்மையில் அவர்களில் பெரும்பாலோர் ஏராளமான சொத்துக்களை தனியாக வைத்துக் கொண்டிருக்கும் போது சாமானியனின் உடையில் வலம் வரும் பாவனை மூலம் மக்களை ஏமாற்றுவதால் என்ன பயன் என நான் கேட்கிறேன். நீங்கள் விசாரித்துப் பார்த்தால் ஏராளமான பல தலைவர்கள் பல லட்சங்கள் பெறுமான தனிச்சொத்துக்களை உடைமையாகக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காண்பீர்கள். தங்கள் குழந்தைகளை பணக்காரர்கள் வளர்ப்பது போன்றே வளர்க்கின்றனர். மேலும் அவர்களது மனைவிமார்களும் பணக்கார வாழ்க்கையை வாழ்கின்றனர். இத்தலைவர்களில் பலர் கட்சிப் பணிக்கு பெரும் நன்கொடைகளை அளிப்பதென்னவோ உண்மைதான். மக்களோ அல்லது கட்சி தொண்டர்களும்கூட தலைவர்களின் இத்தகைய செயல்பாடுகளை நுணுக்கமாக பரிசோதித்துப் பார்ப்பதில்லை. இதற்கு மாறாக இந்தத் தலைவர்கள் இவ்வளவு பெரிய நன்கொடைகளை, பல லட்சக்கணக்கான ரூபாய்களை கட்சிப்பணிக்கு அளித்திருக்கின்றனர் என்று மிகவும் தற்பெருமையுடன் விளம்பரப் படுத்துகின்றனர். தலைவர்கள் எவ்வளவு பெரிய தியாகங்களை புரிந்திருக்கின்றனர் என்பதைக் காட்டவே இப்படிச் செய்கின்றனர். இந்தத் தலைவர்கள் தங்களது கட்சிக்கு ஏராளமாக நன்கொடை அளித்திருக்கக் கூடும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஆனால் இந்தப்பெரிய தொகைகள் அவர்களது மொத்த சொத்துகளில் ஒரு சிறு பகுதியே என்ற உண்மையும் இருக்கிறது. ஆனால் கட்சியின் ஒரு தொண்டர்கூட தலைவர் தன்னிடம் இருக்கின்ற அனைத்தையும் ஏன் விட்டுவிட வில்லை என்ற கேள்வியை எழுப்புவதில்லை.

அவர் ஒரு சுய அர்ப்பணிப்புள்ள புரட்சியாளர் என கருதப்படுபவர். ஒரு கம்யூனிஸ்ட் என்ற முறையில் தனிச் சொத்துடைமையின் வரலாறு என்பது அநீதியின் வரலாறு, அடக்கு முறையின் வரலாறு என்பதை அறிந்தவர், அதுவே அவரது போராட்டத்தை தனிச் சொத்துடைமையை ஒழித்துக்கட்டும் போராட்டமாக ஆக்குகிறது. உற்பத்தி சாதனங்களை சமூக உடைமையாக ஆக்கிட அவர் விழைகிறார். புரட்சியின் நலனுக்காக தமது உயிரை மிக எளிதாக தியாகம் புரியத் தயார் எனத் தம்பட்டமடிக்கும் இவர் ஏன் புரட்சியின் நலனுக்காக தனது தனிச் சொத்துக்களை விட்டு பிரியக்கூடாது? இன்னும் இவர் ஏன் தனிச் சொத்துக்களை தக்கவைத்துக்கொண்டு, உடைமையாகக் கொண்டு இருக்கிறார்? தம்முடைய அனைத்தையும் இவர் ஏன் கட்சிக்கு வழங்க வில்லை? இக்கேள்வியை எழுப்பினால், அதனை கட்சி கேட்கும் பட்சத்தில் கொடுத்துவிட எவ்வித ஆட்சேபனையும் இல்லை என ஒருவேளை அவர் பதில் அளிக்கக் கூடும். கட்சி எதற்காக அதைக்கேட்க வேண்டும்? புரட்சிக்காக உயிரையும் விட்டுவிட அவர் தயாராக இருக்கிறார் அல்லவா? அவ்வாறிருக்கும்போது அவர் தானே முன்வந்து இந்த அற்பத்தனமான தனிச் சொத்துக்களை ஏற்கனவே ஏன் கட்சிக்கு வழங்கவில்லை? இதையெல்லாம் எதற்காக கட்சி கேட்டுக்கொண்டி ருக்கவேண்டும்? இதைக் கேட்கவேண்டுமா இல்லையா என்ற விஷயம் முற்றிலும் கட்சியால் முடிவு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

இத்தலைவர்கள் புரட்சியின் நலனுக்காக அனைத்தையும், ஏன், உயிரையும் தியாகம் செய்வதைப்பற்றி பொதுமேடைகளில் பேசுகின்றனர். ஆனால் புரட்சியின் நலனுக்காக தங்களின் தனிப்பட்ட சொத்துக்களைக்கூட அவர்களால் விட்டுப் பிரிய முடியாது. இத்தலைவர்கள் வேறு எதற்கெல்லாம் தகுதி படைத்தவர்களாக இருப்பினும் ஒரு புரட்சிகரக் கட்சியை வழிநடத்துகின்ற சரித்திரப் பூர்வமான பொறுப்பை மட்டும் ஒருபோதும் இவர்களிடம் ஒப்படைக்கப்படமுடியாது.

அரசியல் என்பது பணக்காரர்களுக்கே ஏற்ற தொழில் என்ற பிரபலமான நம்பிக்கைக்கு இவையனைத்துமே முக்கியக் காரணங்களாகும். எனது இளம் வயதில், எனது தந்தை பணக்காரர் களால் மட்டுமே நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராட முடியும் என்று கூறிய அறிவுரையை நான் நினைவுகூறுகிறேன். இன்றும் ஏழை மற்றும் நடுத்தர மக்களில் பலர் கம்யூனிச சித்தாந்தத்தின் மேல் நம்பிக்கை கொண்டுள்ளனர், அது குறித்து ஏதாவது செய்தாக வேண்டும் என்று தீவிரமாக எண்ணுகின்றனர். ஆனால் கம்யூனிஸ்ட் தலைவர்கள் என்றழைக்கப்படும் இவர்களின் நடத்தையும், வாழ்க்கை முறையும் அவர்களை பணமும், வாழ்க்கையில் பாதுகாப்பும் உடையவர்களால் மட்டுமே அரசியலில் இறங்கமுடியும் என்று எண்ண வைத்து விடுகிறது. இதன் மூலம் இத்தலைவர்கள் புரட்சிகர இயக்கத்தின் ஆன்மாவான போர்க் குணமிக்கத் தீரத்தை அழித்துக் கொண்டிருக்கின்றனர் அவர்கள் கம்யூனிசத்தின் உன்னதத் தன்மைக்கு கேடு மட்டுமே விளைவிக்கின்றனர்.

இத்தலைவர்கள் புரட்சிக்காக தங்களை அர்ப்பணிக்குமாறு நாட்டிலுள்ள மாணவர்களை அறைகூவி அழைக்கின்றனர். மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடம், தொடர்ந்து போராடுங்கள், சிறைகளைக்கண்டு அஞ்சாதீர்கள், குண்டாந்தடி களையும் தோட்டாக்களையும் எதிர்கொள்ளுங்கள்,


தொடர்ச்சி 6ம் பக்கம்

# நேதாஜியின் 126வது பிறந்ததின விழா எழுச்சியுடன் அனுசரிப்பு

நேதாஜியின் 125வது ஆண்டையொட்டி சென்ற ஆண்டு முதல் நாடு முழுவதும் நேதாஜியின் வாழ்க்கை வரலாறு, சுதந்திரப் போராட்டத்தில் அவரது சமரசமற்ற பங்கு, அவரது எதிர்கால இந்தியாவைப் பற்றிய கனவு போன்றவற்றை இன்றைய தலைமுறையிடம் எடுத்துச் செல்ல பல்வேறு நிகழ்ச்சிகளை நேதாஜி 125வது பிறந்த ஆண்டுவிழா கமிட்டி நடத்தி வந்தது. அதன் நிறைவாக, நேதாஜியின் 126வது பிறந்த நாள் நாடெங்கும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அகில இந்திய அளவில் கொல்கத்தா பல்கலைக்கழக அரங்கில் நேரடியாகவும் பிற பகுதி மக்களுக்காக இணைய வழியிலும் இணைத்து இவ்வாண்டு ஜனவரி 23 கூட்டம் நடைபெற்றது.

அதில் நேதாஜியின் புதல்வி அனிதா போஸ், உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி செலமேஷ்வர், லெஃப்டினட் ஜெனரல் ஜமீருதின் ஷா, பிரசித்தி பெற்ற திரை இயக்குனர் ஷியாம் பெனகல், மேற்கு வங்க முன்னாள் அட்வகேட் ஜெனரல் பிமல் சட்டர்ஜி, மும்பை ஐஐடி பேராசிரியர் (ஓய்வு) ராம் புனியானி, தமிழகத்திலிருந்து வழக்கறிஞர் பாலசுப்ரமணியன் ஆகியோர் உரையாற்றினர். விழாக் குழு தலைவர் கொல்கத்தா AIISER பேரா சௌமித்ரோ பானர்ஜி தலைமை வகித்தார். அரங்கில் கூட்டம் துவங்கும் முன்பு கொல்கத்தா வீதிகளில் நேதாஜி புகைப்பட பதாகை ஏந்தி மாபெரும் மாணவர் இளைஞர் பேரணி, சீருடை அணிவகுப்பு, பேரிகை முழக்கம் ஆகியவை நடைபெற்று மிகப் பெரிய புகைப்பட மேற்கோள் கண்காட்சி நிகழ்ச்சியில் நேதாஜிக்கு மலர் மரியாதை பொதுவெளியில் செய்யப் பட்டது. பிறகு பல்கலைக்கழக நூற்றாண்டு அரங்கத்தில் பெருந்திரளுடன் கூட்டம் துவங்கியது.

தியாகம், நேதாஜியின் உந்துசக்தி எனவும் இன்றும் மக்கள் நாட்டு நலனுக்காக, குறிப்பாக




நிறைவு நிகழ்ச்சி கொல்கத்தா

விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காக தியாகம் புரிய முன்வரவேண்டும் என்று பேசிய நேதாஜியின் புதல்வி அனிதா போஸ், பெண்கள் முன்னேற்றம் நேதாஜியின் ஆள்மனதை ஆக்கிரமித்திருந்தது என்றார். எனவேதான் உரிமைகளைக் கோரும் அதே வேளையில் பெண்கள் ஆண்களுக்கு இணையாக விடுதலைப் போரிலும் கடமையாற்ற வேண்டும் எனக் கருதி, ஜான்சி ராணி பெண்கள் படைப்பிரிவை உருவாக்கி அதனை போர் முனையில் முன்னணியில் செயல்பட வைத்தார். நேதாஜி மறைவைப்பற்றி பல கேள்விகள் முன்பு எழுந்தன. அவர் விமான விபத்தில் ஆகஸ்ட் 18, 1946இல் மறைந்தார். ஆயினும் இன்றும் இந்திய இளைய தலைமுறையின் நினைவில் அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பது பூரிப்பைத் தருகிறது என பேரா அனிதா போஸ் கூறினார்.

இந்நிகழ்ச்சியின் முழு காணொலியை காண கீழ்கண்ட இணையதளங்களில் தொடர்பு கொள்ளவும்:

1) You tube link of the Netaji Committee : https://youtu.be/C-pii7jD55U

2) Facebook link of the Netaji Committee: https://www.facebook.com/NetajiSubhash125bacc/live

3) Facebook link of movement news: https://www.facebook.com/indiaNews365/live

### தமிழகத்தில் நேதாஜி பிறந்தநாள் நிகழ்ச்சிகள்

நேதாஜி 125வது பிறந்த ஆண்டு நினைவு விழாக் கமிட்டி தமிழ்நாடு சார்பாக மாணவர், இளைஞர், பெண்கள், தொழிலாளர்கள் அமைப்பினருடன் பொதுமக்களும் சேர்ந்து பல்வேறு இடங்களில் நேதாஜி புகைப்பட மேற்கோள் கண்காட்சிகள், பொதுக் கூட்டங்கள், அரங்கக் கூட்டங்கள் என பலவகையில் நிகழ்ச்சிகளை நடத்தினர்.

தேனி மாவட்டத்தில் அல்லிநகரம், தேனி ஆகிய இடங்களில் மேற்கோள் கண்காட்சியும் தெருமுனை கூட்டமும் நடைபெற்றது திண்டுக்கல் மாவட்டத்தில் வத்தலகுண்டில் காமக்கப்பட்டியில் நேதாஜி இளைஞர் குழு விளையாட்டுப் போட்டி நடத்தினர். தஞ்சாவூர், புதுக்கோட்டை, மீமிசல் ஆகிய இடங்களிலும் மதுரையில் வக்ஃபோர்டு கல்லூரி, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, அவனியாபுரம், கோரிப்பாளையம் ஆகிய இடங்களிலும் நேதாஜி நிகழ்ச்சிகள் நடைபெற்றது. ஜனவரி 23ஆம் தேதி மதுரையில் நேதாஜி சிலை நோக்கி ஊர்வலமாக சென்று இளைஞர்களும் பொதுமக்களும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதில் மதுரை சுற்றியுள்ள கல்லூரிகளில் இருந்து மாணவர்கள் பெரும் அளவில் கலந்து கொண்டனர் மேலும், ராஜபாளையம் ராஜுஸ் கல்லூரி, சங்கரன் கோவில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரி ஆகிய கல்லூரிகளில் நேதாஜி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சென்னையில் கொளத்தூர், ஓட்டேரி, ஆர்ஆர் நகர், கேபிபார்க், கொருக்குப்பேட்டை, மகாகவி பாரதியார் நகர், எம்ஜிஆர் நகர், கோடம்பாக்கம் ஆகிய இடங்களில் நேதாஜி கண்காட்சி நடைபெற்றது. விருதுநகர் மாவட்டத்தில் திருத்தங்கல், எம் ரெட்டியபட்டியிலும் சேலம் மாவட்டத்தில் கோரிமேடு, மல்லூர் ஆகிய இடங்களிலும் நேதாஜி புகைப்பட மேற்கோள் கண்காட்சியும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. விழுப்புரம், அவியனுர், பரசுரெட்டிப்பாளையம் கிராமங்களில் மக்கள் நேதாஜி உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். நெய்வேலியில் இரண்டு இடங்களில் குழுவிவாதமும் வடலூரில் தெருமுனைக் கூட்டமும் ஜவஹர் அறிவியல் கல்லூரியிலும் நேதாஜி பிறந்ததினம் அனுசரிக்கப்பட்டது ■



பேரா முரளி மதுரையில் நேதாஜி பேரணியைத் துவக்கி வைக்கிறார்



மதுரை வக்ஃபோர்டு கல்லூரி என்சிசி மாணவர்கள் நேதாஜி விழாவில் பங்கேற்பு



சென்னை



வடலூர், நெய்வேலி



திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்



புதுக்கோட்டை



தேனி, காமக்காபட்டியில் நேதாஜி நினைவு வாலிபால் போட்டி



வானூர், விழுப்புரம் ஏஐயுடியுசி தொழிற்சங்கம் – பிறந்ததினக்கூட்டம்



பொன்மொழிக் கண்காட்சி மல்லூர், சேலம்



பொன்மொழிக் கண்காட்சி, தேனி




எம் ரெட்டியபட்டி, விருதுநகர் மாவட்டம்

# மத்திய பட்ஜெட் 2023 - 24 பொருளற்ற சொல்லாடல்களால் உண்மை நிலையை மூடி மறைக்கும் மற்றுமொரு தந்திர ஆவணம்

*மத்திய பட்ஜெட் 2023–24 சமர்ப்பிக்கப் பட்டவுடன் விரைவு அறிக்கையாக எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் 01.02.2023 அன்று வெளியிட்ட அறிக்கை:*

எதிர்பார்த்தது போலவே, நாட்டு மக்களை தொடர்ந்து ஓட்டாண்டி ஆக்கிவரும் கடுமையான பொருளாதார நெருக்கடியின் பிரதிநிதித்துவ மாகவே இந்த பட்ஜெட் 2023–24 அமைந்திருக்கிறது.

நன்றாக உள்ளது என்ற உணர்வை ஏற்படுத்தும் சில நிதி ஒதுக்கீடுகளோ, தனிநபர் வருமான வரியில் சிறிது தளர்வோ, 80கோடி மக்களுக்கு ரேஷன் உணவுப் பொருளை ஓராண்டு நீடிக்கிறோம் என்ற, முன்பு எதிர்க்கட்சியாக இருந்தபோது ஆளுவோரை ஏளனம் செய்த அதேபோன்ற, பெருமைமிகு அறிவிப்போ இவை எல்லாமே வழக்கமான ஏமாற்றுக்களாகும். 80கோடி மக்கள் வறுமையில் இருப்பதை இவர்களே ஒப்புக்கொள்கிறார்கள்! இவர்களது ஒதுக்கீடு அதிகரிப்புகளும் வரிவிதிக்கப்படும் வருமான வரம்பு சற்றே அதிகரிப்பும் 30% விலையேற்றத்தை ஒப்பிடும் பொழுது மக்களின் துயர் குறைவதற்குப் பதிலாக மேலும் கடுமையாகவே செய்யும். முதலீடு வரவை பெருக்குகிறோம், கட்டுமான வசதிகளை மேம்படுத்துகிறோம் என்ற பெயரில் ஏகபோக முதலாளிகளுக்கு வாரி வழங்கிவிட்டு ஜனரஞ்சகமான சில திட்டங்களை இந்தி வார்த்தைகளைப் பயன்படுத்தி ஜோடித்து திட்டங்களை அறிவித்து, அவையும் 'செய்வோம்', 'நிறுவுவோம்', 'நடக்ககூடும்' என சம்பிரதாய வார்த்தைகளால் நிதி அமைச்சர் மொழிந்துள்ளார். இதற்கு முன் பிரதமர் தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதிகள் எவையும் தற்போது நினைவுகூறுவதை கவனமாகத் தவிர்த்துள்ளார். வெளியிலிருந்து வரும் மோசமான பொருளாதார தாக்குதல்களை சமாளித்து நாட்டின் பொருளாதாரம் நம்பிக்கைதரும் விதத்தில் உள்ளது என எந்த ஆதாரமும் இல்லாமல் பேசியுள்ளார்.

பணமதிப்பு நீக்கத்திற்குப் பிறகு டிஜிடல் பரிவர்த்தனை 66% உயர்ந்திருப்பதாக பெருமை பேசிய அவர், காகித பணப் புழக்கம் 72% அதிகரித்திருப்பதை கூறவில்லை. கிடுகிடுவென உயர்ந்துவரும் பணவீக்கத்தைப் பற்றியோ, பொருளாதார வீழ்ச்சியைப் பற்றியோ, ஆலைமூடல்களால் அதிகரிக்கும் வேலையின்மை குறித்தோ, முறைகேடுகள் மூலம் பெரும் நிறுவனங்கள் செயற்கையாக பங்குச் சந்தையில் குறியீடுகளை உயர்த்தி தங்கள் சொத்துக்களை பெரிதாகக் காட்டுவதைக் குறித்தோ, வங்கிகளின் செயல்படாத சொத்துக்கள் குறித்தோ, ஆசிய சந்தையில் ரூபாய் மதிப்பு வீழ்ச்சியைப் பற்றியோ பட்ஜெட் உரையில் எதுவும் இல்லை. பொருட்கள் மற்றும் சேவைகளை நுகர்தலால் வீடுகளில் நுகர்வுகள் அதிகரித்திருப்பதாக கூறுவது முற்றிலும் ஏற்புடையதல்ல. ஏனெனில் மேல்தட்டு பணக்காரர் வீடுகளில்தான் அத்தகைய நுகர்வுகள் அதிகரித்துள்ளன. மேலும், தனிநபர் சேமிப்புகள் குறைந்து கடன் 83.5 ட்ரில்லியன் ரூபாய் அதிகரித்திருப்பது, நடுத்தர மேல்தட்டு குடும்ப நபர்களின் வருமானம் குறைந்து கடன் வாங்கி நுகரும் கிரெடிட் டிரைவன் (Credit driven) பொருளாதாரத்தைத்தான் சுட்டிக்காட்டுகிறது.

பட்ஜெட் பற்றாக்குறையை சமாளிக்க இப்போதும் ரூ15 லட்சம் கோடி அன்னிய கடனுதவியை நாடியுள்ளனர். இதுவரை மொத்தக் கடன் ரூ155.31 இலட்சம் கோடி அதாவது ஒவ்வொரு இந்தியக் குடிமகன் தலைமீதும் ரூ1,09,373 கடன் சுமத்தப்பட்டுள்ளது. ஒரே ஒரு பில்லியனர் அதானிமீது 2017–21 ஆண்டு எதிர்ப்பார்த்த அல்லது வரப்போகும் இலாபத்தின் மீது ஒருமுறை வரி விதித்தாலே ரூ1.79 இலட்சம் கோடி வருவாய் வந்திருக்கும்; அல்லது நாட்டின் பணக்காரர்களின் வரிசையில் மேலே உள்ள 10 நபர்களுக்கு வெறும் 5% வரி விதித்தாலே ரூ1.37இலட்சம் கோடி வந்துவிடும் என ஒரு சர்வே கூறுகிறது. 2021–22இல் சரக்கு மற்றும் சேவை வரிகள் ஜிஎஸ்டி மொத்தம் நிதி வருவாய் 14.83 இலட்சம் கோடியாக வளர்ந்திருக்கிறது என நிதி அமைச்சர் பெருமையாக கூறுகிறார்; ஆனால் அதில் 64% வருவாய், அடிமட்டத்தில் இருக்கும் 50% ஏழை நடுத்தர மக்களிடமிருந்து வந்துள்ளதையும் டாப் 10%மாக இருக்கும் பணக்காரர்களிடமிருந்து வெறும் 3% மட்டுமே வந்துள்ளதையும் குறிப்பிடவில்லை. மக்களுக்கு வழங்கப்பட்ட கடன் (கிரெடிட்) பணக்காரர்களில் பைகளுக்குள் சென்றுவிட்டது; இது போதாது என்று, தொழிலதிபர்களுக்கு மேலும் கடன் தள்ளுபடிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆக, மத்திய பட்ஜெட் அறிக்கை மக்கள் அடிப்படை பிரச்சினைகளைத் தொடவில்லை. மாறாக வார்த்தை ஜாலங்கள் கொண்ட, புளித்துப் போன, பிரதமரின் வழக்கமான துதியாக, ஆளும் ஏகபோக வர்க்கத்திற்கு சேவைசெய்யும் பாஜக அரசாங்கத்தின் தோல்வியை பறைசாற்றுகிறதே அன்றி, மக்கள் நலனுக்கு முற்றிலும் எதிரானதாக இருக்கின்றது ■

# பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தை . . .

4ம் பக்கத் தொடர்ச்சி

எதிர்காலத்தைப்பற்றி அக்கறை வேண்டாம் என்றெல்லாம் வலியுறுத்திக் கூறுகின்றனர். ஆனால் தமது சொந்த குழந்தைகளிடமோ நல்ல மாணவர்களாய் இருங்கள், முதலில் வசதியான எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள், வாழ்க்கையை ஸ்திரப்படுத்திக் கொள்ளுங்கள் அதன்பின் என்ன செய்யலாம் என்று முடிவு செய்யுங்கள் எனக் கூறுகின்றனர். தங்களுடைய சொந்த மகன்களுக்கு நல்ல சம்பளத்தில் வேலையைத் தேடுகின்றனர். மகள்களுக்கு நல்ல வேலையிலுள்ள மணமகனை தேடிக்கண்டு பிடிக்கின்றனர். ஆனால் வெகுஜனங்களின் மகன் மற்றும் மகள்களுக்கு புரட்சிக்காகப் போராடுங்கள் என்பதே அவர்களின் அறிவுரையாக இருக்கிறது. இத்தலைவர்களின் இப்படிப்பட்ட வெட்கமற்ற வேஷதாரித்தனத்தின் காரணமாக மிக உன்னதமான கம்யூனிச சித்தாந்தமானது பொருளாதாரவாதம், சீர்திருத்தவாதம் என்னும் குறுகிய வட்டத்திற்குள் கட்டுண்டு புரட்சியின் நலனுக்காக மக்களை உத்வேகப்படுத்த இன்றுவரை தவறிவிட்டது.

எளிமையும், திறந்த மனமும் கொண்டவர்களாக தங்களைக் காட்டிக்கொள்ளும் கம்யூனிஸ்ட் தலைவர் என்றழைக்கப்படும் பலர் நம் நாட்டில் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் தங்களின் வசதியிலும், வங்கி இருப்பு குறித்தும் கவனத் தோடு இருக்கின்றனர். குடும்ப வாழ்க்கை மற்றும் சொந்தச் செலவுகள் என வரும்போது அவர்கள் ஏராளமாய் செலவழிக்கின்றனர். மிகுந்த செல்வத் தையும் ஏராளமான சொத்துக்களையும் குவித்து வைத்துக்கொண்டு ஆனால் பொது மக்களிடம், விவசாயிகளிடம், தொழிலாளர்களிடம் சாமானியர் களின் உடையில் செல்கின்றனர். தம் சொந்த வாழ்க்கைமுறையை மறைத்துக்கொண்டு, சுய தியாகம் புரியும் சாமியார்களைப் போல், தம்மை ஏன் காட்டிக் கொள்கின்றனர்? இது தொழிலாளர் களை ஏமாற்றுவதற்காக அல்லவா? இது மக்களை ஏமாற்றுவதைத்தவிர வேறென்ன? மக்களிடம் புகழையும், மலிவான பிரபல்யத்தையும் சம்பாதிக்கும் ஆர்வத்தில் இடதுசாரிகள் மற்றும் கம்யூனிஸ்ட் தலைவர்கள் என்றழைக்கப்படும் இவர்கள் கம்யூனிச அறிவியலைப் பரப்புவதற்கு இத்தகைய ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளனர்!

இந்த வகையைச் சேராத, தங்களுக்கென்று தனிச்சொத்து எதுவும் இல்லாத, வேறொருவகைத் தலைவர்களும் இருக்கின்றனர். ஆனால் இத்தலைவர்களும்கூட தங்களது தியாகத்திற்குப் பிரதிபலனாக கட்சியிடமிருந்து நிறைய எதிர்பார்க் கின்றனர். சிலர் கட்சியில் பதவியை விரும்பு கின்றனர். வேறு சிலர் வசதிகளை விரும்புவதால் தினசரி வாழ்க்கையின் கஷ்டங்களைப்பற்றி முணுமுணுக்கின்றனர்.

கட்சியானது தன் வளமையான போக்கில் அதன் அவசியத்தை உணர்ந்து, ஓரளவு வாழ்க்கை வசதிகளைத் தர முடியுமெனில் அப்போது அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமே யொழிய, ஒருபோதும் வசதிகளுக்காக எந்த ஏக்கமும் கொள்ளக்கூடாது. வாழ்க்கை நிலைமைகள் மோசமாக இருப்பின் அதைப்பற்றி முணுமுணுக்கக் கூடாது. இப்படிப்பட்ட மனப்பான்மையே சரியான புரட்சிகர மனப்பான்மையாகும்.


ஆனால் தங்களின் 'எல்லையற்ற' தியாகங்களுக்கு மாற்றாக ஏதாவது எதிர்பார்க்கும் தலைவர்களும் இருக்கின்றனர். இந்த 'ஏதாவது' என்பது கட்சியில் ஒரு பதவி அல்லது வாழ்க்கையில் சில வசதிகள் எனப் பெறுவதற்கு பல்வேறு வடிவங்களில் கட்சியை நிர்ப்பந்திக்கின்றனர். தாங்கள் ஏராளமாக தியாகம் செய்திருப்பதால் கடுமையாகப் போராடியிருப்பதால், கட்சிக்காக 'அனைத்தையும்' விட்டுவிட்டதால் அதற்குப் பிரதிபலனாக கட்சியிடமிருந்து 'எதையாவது' பெறுவதற்கு உரிமையுள்ளவர்கள் என எண்ணிக் கொள்கின்றனர். இத்தகைய 'தியாகம்' குறித்த கோட்பாடு அதற்கு மாற்றாக ஏதாவது பெற வேண்டும் என்ற ஆசையை உருவாக்குகிறது. இந்த எதிர்பார்க்கும் தன்மை மனிதனுக்கு மனிதன் மாறுபடுகிறது. சிலர் பணத்தை எதிர்பார்க்கின்றனர், பெயரும் புகழும் பெற சிலர் துடிக்கின்றனர். சிலர் பதவி ஆசை கொண்டு சச்சரவுகளில் ஈடுபடுகின்றனர். வேறு சிலர் ஏதாவது ஒரு வடிவத்தில் முன்னுரிமை கோருகின்றனர். இவையனைத்திற்கும் பின்னால் மோசமான பூர்ஷ்வாக் கலாச்சாரம் மற்றும் பூர்ஷ்வா தனிநபர்வாதத்தின் ஆதிக்கம்தான் செயல்படுகிறது ■

(ஏன் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) மட்டுமே ஒரே உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி, 1969, மார்ச் 18ல் தோழர் சிப்தாஸ் கோஷ் மேற்கு வங்க தோழர்களிடம் ஆற்றிய உரை)

## நேதாஜியின் 126வது பிறந்ததினம்



அவியனூர், கடலூர் மாவட்டம்




சுவரெழுத்துப் பிரச்சாரம்



புதுச்சேரி

## ஆளுநர் வெளிநடப்பு . . .

# பாஜக ஆளாத மாநில அரசாங்கங்களில் ஆளுநர்களின் குறுக்கீடுகள் ஒன்றுபோலவே அதிகரித்துக்கொண்டிருக்கின்றன

1ம் பக்கத் தொடர்ச்சி

காரணங்களைக் கூறி ஆட்சியைக் கலைப்பதும் முன்பு பலமுறை நடந்துள்ளன. இன்று திமுக கூட்டணியில் இருக்கும் காங்கிரஸ் கட்சியே அரசியல் அமைப்புச் சட்ட ஷரத்து 356ஐ பிரயோகித்து ஆளுநர் மூலமாக திமுக அரசாங்கத்தை கலைத்த வரலாறும் உண்டு. ஆனால் சமீபகாலமாக, பாஜக, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் கவர்னர் மூலமாக தனது அரசியல் நிலைப்பாட்டை பரப்புவதும், பல்வேறு குறுக்கீடுகளைச் செய்வதும் அதிகரித்து வருகிறது. மேற்கு வங்கத்தில் ஆளுநர் ஜக்தீப் டாங்கர் மீது எழுந்த பல்வேறு குற்றச் சாட்டுகளால் அவர் மாற்றப்பட்டார். பாஜகவின் ஏஜெண்ட்டாக செயல்படுகிறார், மாநில அரசாங் கத்தின் பல்வேறு மசோதாக்களை அவர் நிறைவேற்றாமல் காலம் தாழ்த்துகிறார் போன்ற குற்றச்சாட்டுகளை திரிணமுல் காங்கிரஸ் முதல்வர் மம்தா பானர்ஜி முன்வைத்தார். அது மட்டுமின்றி மாநில பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிகளை அமைக்கும் அதிகாரத்தை கவர்னரிட மிருந்து பறித்து முதல்வரிடம் மாற்றும் மசோதா ஆளுநர் மேஜைமீது ஒப்புதலுக்காகக் கிடக்கிறது. அதேபோல, கேரளாவிலும் துணைவேந்தர்கள் நியமனத்தில் ஆளுநர் எதேச்சதிகாரமாக செயல்படுகிறார் எனக் கூறி அவரை திருப்பி அழைக்க வேண்டும் என இடது முன்னணி அரசாங்க கட்சிகள் கோருகின்றன. ஆளுநரோ, தான் தலையிட விரும்பவில்லை ஆனால் மாநிலத்தில் எல்லா ஊழலும் கடத்தல்களும் முதலமைச்சர் அலுவலகத் தொடர்பில் நடக்கின்றன என விளக்கமளிக்கிறார். அங்கும் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் நியமனத்தில் ஆளுநர் குறுக்கீடுவதாகவும், ஏராளமான மசோதாக்கள் ஆளுநர் மாளிகையில் தூங்குவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுகின்றன. புது டெல்லி, தெலுங்கானா, பஞ்சாப் என பாஜக இல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்களிலெல்லாம் கிட்டத்தட்ட ஒரேமாதிரியான குற்றச்சாட்டுகள் எழுகின்றன.

### அரசாங்க உரையில் சொன்ன சாதனைகள் மக்கள் பிரச்சினைகளைப் பிரதிபலிக்கவில்லை

திமுக அரசாங்கத்தின் ஆட்சி 20மாதங்களாக நடைபெற்று வருகிறது. ஆனால் மக்களின் கோரிக்கைகள் எதையும் தீர்க்காமல், தேர்தல் வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்றாமல், வீட்டுவரி, குடிநீர், கழிவுநீர் வரிகளை, மின் கட்டணத்தை கிட்டத்தட்ட இரட்டிப்பாக்கி விட்டு, நகர்புறத்தை அழகுபடுத்த குடிசைப் பகுதிகளை இரக்கமின்றி இடித்துவிட்டு, பரந்தூரில் விமானநிலையம் அமைக்க ஆயிரக்கணாக்கான விவசாயிகளை அப்புறப்படுத்த அச்சுறுத்திவிட்டு, பெண்களுக்கு பேருந்தில் இலவச பயணம் போன்ற ஒருசில பாபுலர் திட்டங்களைச் சாதனைகளாகப் பறைசாற்றி அலங்கார வார்த்தைகளைக் கொண்டு இந்த அறிக்கையை திமுக தயாரித்துள்ளது. சட்டமன்றக் கூட்டத்தொடர் துவங்கும்போது அரசாங்கம் தனது ஆட்சியை மிகைப்படுத்தி அறிக்கையை ஆளுநர் மூலம் உரையாக வாசிப்பது வழக்கமானதுதான். மேலும், 'தமிழ்நாடு ஒரு தனி நாடு அல்ல, அதைப் பயன்படுத்தக் கூடாது தமிழகம் என்ற சொல்லே பொருத்தமானது', 'திராவிடம் என்பது இனம் அல்ல, நிலப்பரப்பு' என்றெல்லாம் பேசிவரும் ஆளுநரின் நிலைப் பாட்டை நன்கு அறிந்தே திமுக அரசாங்கமும் அவ்வார்த்தைகள் அடங்கிய அறிக்கையை தயாரித்தது. ஆளுநர் சில பகுதிகளைத் தவிர்க்கக் கூடும் என்று ஒருவேளை திமுக எதிர்பார்த் திருக்க வேண்டும். முதல்வர் மிக விரைவாக சில நிமிடங்களில் தீர்மானத்தை தயாரித்ததிலிருந்து இந்த ஐயம் எழுகின்றது. மேலும், ஆளுநர் உரையை வாசிக்கும் முன்பே திமுகவின் கூட்டணிக் கட்சிகள் ஆளுநரை எதிர்த்து கோஷமிடத்துவங்கி வெளிநடப்பும் செய்தன. எதிர்ப்பார்த்தது போலவே ஆளுநர் சில பகுதிகளைத் தவிர்த்தார். ஆளுநர் உரைக்கு முன்பும் உரையின்போதும் உரைக்குப் பின்பும் தடையோ குறுக்கீடுகளோசெய்யக்கூடாது என்ற சட்டப்பேரவை விதி எண் 17ஐ தளர்த்தி உடனே விரைந்து தயாரித்த தீர்மானத்தை முதல்வர் திரு ஸ்டாலின் வாசித்தார். ஆளுநர் வெளிநடப்பு மரபு மீறல் என்றால் விதியைத் தளர்த்தி ஆளுநர் உரை செல்லாது, அச்சிடப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்ட உரையே அதிகார உரையாகும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியதும் மரபல்லாத அரிதான தளர்வு என்றே கொள்ள வேண்டும்.

எது எப்படி இருப்பினும் இருதரப்பினர் செயல்பாடும் மக்களின் உண்மையான நலன்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்த சச்சரவல்ல. இதன்மூலம், ஆண்டு துவக்கக் கூட்டத்தின் முதல்நாளில் பல்வேறு மக்கள் கோரிக்கைகளை முன்னிறுத்தி எதிர்க்கட்சிகளும் விவாதிக்க வில்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, காங்கிரஸ் மற்றும் பல கூட்டணிக் கட்சிகளும் திமுகவின் குரலையே ஒலித்துக் கொண்டிருந்தன. பாஜகவின் தலைவராலும் தொலைக்காட்சி பேட்டியில் ஆளுநரின் செய்கை சரி என வாதிக்க முடியவில்லை. எனவே, ஆளுநர் தனது வரம்பை மீறி பாஜக அரசியல் வாதிபோல் நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டை மறுப்பதற்கில்லை.

### நாட்டின் மீது பாஜக தனது நிர்வாகப் பிடியை இறுக்கிக்கொண்டேருக்கின்றது

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்றெல்லாம் திமுக இந்திய ஜனநாயக அமைப்பை வருணித்த காலம் மலையேறிவிட்டது. மாநிலங்களின் சுயாட்சி அதிகாரங்கள் படிப்படியாக பறிக்கப்பட்டு வருகின்றன. கல்வி, அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாவது பிரிவின் கீழ் மாநிலத்தின் முழு அதிகாரப் பட்டியலி லிருந்து மத்திய அரசாங்கத்தின் ஒப்புதல் பெறவேண்டிய அதாவது மத்திய அரசாங்கத்தின் அதிகாரப் பட்டியலுக்கு மாற்றப்பட்டுவிட்டது. இது, காங்கிரஸ் ஆட்சியில் அவசரகால (எமெர்ஜென்சி) கட்டத்தில் செய்யப்பட்டது. இதனால்தான் இன்றும் தேசிய கல்விக் கொள்கை, நீட் (NEET) போன்றவை மாநில கொள்கையைவிட அதிகாரம் படைத்ததாகக் கொண்டுவரப்படுகின்றன. தற்போது பாஜக மத்திய அரசாங்கம் ஒரே நாடு, ஒரே ரேஷன், ஒரே தேர்வு, ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் என்று மைய அதிகார அமைப்பை, அதுவும் இந்துத்துவ அமைப்பை உருவாக்கும் வகையில் செயல்படுகிறது. தனது கொள்கையை, வேற்று அரசியல் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர் மூலமும் பாஜகவின் மாநிலச் செயலாளர்கள் மூலம் திணிக்க முயற்சிக்கிறது.

இது வெறுமனே பாஜக கட்சியின் தனிப்பட்ட அரசியல் மட்டுமல்ல. ஆளும் இந்திய ஏகபோக முதலாளித்துவ வர்க்கம் நிதிமூலதனத்தை மையப்படுத்தி, அதற்கேற்ப ஒரேமாதிரியான பொருளாதார அரசியல் கொள்கையை நாட்டில் கொண்டுவர, நிர்வாக அதிகாரத்தையும் மையப்படுத்துகின்றது. இன்று பிரதமர் நேரடியாக மாவட்ட ஆட்சியாளர்களிடமும் மாவட்ட காவல் அதிகாரிகளிடமும் நேரடியாக உரையாற்றுகிறார். ஆளுநரைக் கொண்டு கல்லூரிகள் பல்கலைக் கழகங்கள் பல்வேறு நிறுவனங்கள் கட்டுப்படுத்தப் படுகின்றன. தமிழ்நாட்டில் அதிகாரம் முதல்வருக்கா ஆளுநருக்கா என்ற கேள்வி சாமானியனிடமும் எழும் அளவிற்கு அதிகாரக் குவியல் மத்திய அரசாங்கத்திடம் நடக்கிறது.

மூலதனம் கோலோச்சும் இன்றைய முதலாளித்துவத்தில் பாராளுமன்ற ஜனநாயகம், படிப்படியாக, பாராளுமன்ற முகத்திரையைக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் ஃபாசிச ஆட்சியாக சீரழிந்து வருகின்றது என முன்பே தோழர் சிப்தாஸ் கோஷ் சுட்டிக் காட்டினார் (ஃபாசிசம் குறித்து, 1976.). மூலதனக் குவியல், நிர்வாக அதிகாரக் குவியல் ஜனநாயக உரிமை களைப் பறித்தல் இவையாவும் ஃபாசிசத்தின் குணாம்சங்களாகும். விலைவாசி உயர்வு, வேலையின்மை, விவசாயிகள் தற்கொலை, பெண்கள்மீதான வன்முறைகள், கலாச்சாரச் சீரழிவுகள் என உண்மையான பிரச்சினைகளை ஏழை நடுத்தர மக்கள் கையிலெடுத்து ஒன்றுபட்டு தனக்கெதிராகப் போராட்டங்களில் இறங்கி விடாமல் தடுக்கவே ஃபாசிச அடக்குமுறையை ஆளும் வர்க்கம் கையிலெடுக்கிறது. மக்கள் கவனத்தை திசைதிருப்பவும் ஒற்றுமையைக் குலைக்கவும் தினசரி அரசியல் நாடகங்களை திட்ட மிட்டு முதலாளித்துவக் கட்சிகள் நடத்துகின்றன. அத்தகையக் காட்சிகளில் ஒன்றுதான் ஆளுநர் வெளிநடப்பும் அதையொட்டிய சலசலப்பும். உழைக்கும் மக்கள் இதனால் கவனம் சிதறிவிடாமல் தங்களின் கோரிக்கைகளுக்காக நடத்தும் போராட்டங்களை மேலும் வலுப்படுத்த வேண்டும் ■

## நிலம்–குடியிருப்பு–வாழ்வுரிமை கோரிக்கை மாநாடு

சென்னை மாநகரத்தின் பூர்வக்குடி உழைக்கும் மக்களின் வீடுகளை இடித்துவிட்டு அவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றும் மாநில அரசாங்கத்தின் போக்கை எதிர்த்த பலகட்ட போராட்டங்களை பாதிக்கப்பட்ட மக்கள் அயராது முன்னெடுத்து வருகிறார்கள்.

அதன் ஒரு பகுதியாக 04.01.2023 அன்று நகர்ப்புறக் குடியிருப்பு–நில உரிமை கூட்டமைப்பின் சார்பில் 'நிலம்–குடியிருப்பு–வாழ்வுரிமை' மாநாடு ஒன்றை நடத்தினார்கள். அம் மாநாட்டுக்கு தோழர் ஆர் கீதா தலைமையேற்றார். காணொலி வாயிலாக தோழர் மேதா பட்கர் (என்ஏபிஎம் – அகில இந்தியத் தலைவர்) வாழ்த்துரை வழங்கினார். மேலும் நகர்ப்புறக் குடியிருப்பு– நில உரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளரான தோழர் சிறிராம், தோழர் செபஸ்டியன், உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் உரையாற்றினர்.

இம்மாநாட்டில் நிலம்–குடியிருப்பு– வாழ்வுரிமை தொடர்பாக கொண்டுவரப்பட்ட பல்வேறு தீர்மானங்களில் பரந்தூர் விமான நிலையம் வேண்டாம் என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது ■




மேடையில் தலைவர்கள்

## கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் ஏஐகேகேஎம்எஸ் வட்டார மாநாடு

10.01.2023 அன்று கடலூர் மாவட்டம் பண்ருட்டி தாலுகா, அவியனூரில் அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் (ஏஐகேகேஎம்எஸ்) சங்க வட்டார மாநாடு நடைபெற்றது. மாநாட்டுக்கு தோழர் அல்லிமுத்து தலைமை தாங்கினார். தோழர் ஆ ரெங்கசாமி, ஏஐகேகேஎம்எஸ் அகில இந்திய உப தலைவர் சிறப்புரையாற்றினார். மாநாட்டில் பண்ருட்டி வட்டாரக் கமிட்டி ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது ■



வட்டாரக் கமிட்டி உறுப்பினர்களும் மாநிலத் தலைவர்களும்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# ஆங்கிலத்தை அகற்றிவிட்டு இந்தியை ஒற்றை ஆட்சிமொழியாகவும் பயிற்றுமொழியாகவும் ஆக்குவதற்கு எதிராகப் பொங்கியெழுவோம்

இந்தியை மட்டுமே ஒற்றை ஆட்சி மொழியாகவும் பயிற்றுமொழியாகவும் ஆக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆங்கிலத்தை நீக்குவதற்கும் மற்ற இந்திய மொழிகளின் வளர்ச்சியை புறக்கணிப்பதற்கும் பல்வேறு மோசமான பரிந்துரைகளை அலுவலக மொழிக்கான பாராளுமன்ற கமிட்டி மத்திய அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளது. ஏற்கெனவே மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் கல்வி நிறுவனங்களில் இந்தி படிப்பதை கட்டாயமாக்கி விட்டனர். தற்போது மருத்துவக் கல்லூரிகள், ஐஐடி, ஐஐஎம், மத்திய பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் இந்தியைப் பயிற்று மொழியாக ஆக்குவதற்கும் மத்திய அரசாங்கப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளை இந்தியில் மட்டுமே நடத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொதுவாக, எந்த இந்திய மொழியையும் போலவே இந்தியையும் யாரும் பயில்வதில் எந்தப்பிரச்சினையும் இல்லை. நம் நாட்டில் இந்தியை இரண்டாவது அல்லது மூன்றாவது மொழியாகக் கொண்ட தென்னிந்திய, கிழக்கிந்திய மாநிலங்கள் இருக்கின்றன. இந்தியை மட்டுமே அலுவல் மொழியாகக் கொண்டால், இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட மக்களுக்கு அது சாதகமாக அமைந்து, பிறமொழி பேசும் மக்களுக்கு அநியாயமிழைத்ததாகிவிடும்.

நம்மைப்போன்ற பன்மொழி பேசும் சமுதாயத்தில் நாடு முழுவதற்குமான ஒற்றை ஆட்சி மொழி என்று இருக்க முடியாது எனவே தான் அரசியலமைப்புச் சட்டத்தின் 8வது அட்டவணையில் ஆங்கிலம் உட்பட இந்தியாவின் 22 மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுக்கப் பட்டுள்ளது.

நமது நாட்டில் மாநிலங்களுக்கு இடையேயான தொடர்புக்கு ஆங்கிலம் ஒரு இணைப்பு மொழியாக வரலாற்று ரீதியாக உருவாகிவிட்டது. அனைத்துத் துறைகளிலும் ஏற்படும் நவீன வளர்ச்சிகளை நமக்கு கொண்டுவரும் வாயிற் கதவாக ஆங்கிலம் உள்ளது, அது மட்டுமல்லாது இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கும் ஆங்கிலம் உதவியுள்ளது. நமது நாட்டின் மறுமலர்ச்சிகால முன்னோடிகளுக்கு ஆங்கிலத்தின் மூலமாகத்தான் நவீன அறிவியல்பூர்வ, மதச்சார்பற்ற, ஜனநாயக பூர்வ கருத்துக்களோடு தொடர்பு ஏற்பட்டது என்பதையும் ஆங்கிலேயர்கள் ஆட்சிக்கும் நிலப்பிரபுத்துவ பிற்போக்குத்தனத்திற்கு எதிரான போராட்டத்தில் நாட்டை ஒற்றுமைபடுத்துவதற்கும் ஆங்கிலம் உதவியது என்பதையும் மறந்து விடக்கூடாது.

மாணவர்களின் அறிவுத்திறன் மேம்பாட்டிற்கும் மனவளர்ச்சிக்கும் ஆரம்பக் கல்வி முதல் உயர்கல்வி வரை அவரவர் தாய்மொழியில் கற்பித்தல் இன்றியமையாதது. ஆனால் நம் நாட்டில் மிக உயர்ந்த கட்டம் வரை கற்பிக்கப் படுவோரின் தாய்மொழியில் கல்வி அளிக்கப்பட மூன்று நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுவது அவசியமாகின்றது என எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளர் தோழர் சிப்தாஸ் கோஷ் சுட்டிக்காட்டுகிறார் (மொழிப் பிரச்சினை, **1965**, தமிழில் **2020**):

“முதலில் இந்தியாவின் பல்வேறு தேசிய மொழிகள் கலை, இலக்கியம் மட்டுமின்றி தத்துவம், அறிவியல், தொழில்நுட்பம், சட்டயியல் மற்றும் அறிவுத்துறையின் பிற கிளைகளிலும் மிக அண்மைக்காலத்திய மிக நுட்பமான சிந்தனைகளை வெளியிட இயலும் வகையில் வளம் பொருந்தியதாக இருக்கவேண்டும்.

இரண்டாவதாக இப்போதிருப்பது போன்று ஆங்கிலத்தில் மட்டுமின்றி கற்பிக்கப்படுபவரின் தாய் மொழியிலும் மிக உயர்மட்டம் வரையிலும் கற்பிக்கும் திறனுடைய தகுதி படைத்த ஆசிரியர்கள் போதுமான அளவு இருக்கவேண்டும்.

மூன்றாவதாக மிக உயர்ந்த மட்டம் வரையிலும் அறிவுத் துறையின் எல்லாக் கிளைகளிலும் தரமான புத்தகங்களும், உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றத்தின் முடிவுகளின் (Judicial decisions) தரமான மொழிபெயர்புகளும் நம் நாட்டின் அனைத்து தேசிய மொழிகளிலும் இருக்கவேண்டும்.

நாம் வீண் பெருமை கொண்டு இந்த நிபந்தனைகளை நிறைவேற்றிவிட்டோம், எனவே இத் தகுதிகளை நம் மொழிகள் கொண்டுள்ளன என்று வலியுறுத்தக்கூடாது. நாம் எவ்வளவு விரும்பியும் இந் நிபந்தனைகளை நிறைவேற்ற இதுவரை நம்மால் இயலவில்லை. அதன் காரணமாக நம் பல்கலைக்கழங்களில் ஆங்கிலத்தையே பயிற்று மொழியாக கொண்டிருக்க வேண்டியுள்ளது.

இந்நிபந்தனைகளை நிறைவேற்றினாலும்கூட பல்வேறு மாநிலங்களுக்கிடையேயும் மத்திய அரசாங்கத்துடனும் சர்வதேசத் தொடர்புக்கும் ஆங்கிலம் பயிலுவது இன்றியமையாததாகும். இத் தேவையை வேறு எந்த மொழியைக் கொண்டும் நமது நாட்டில் நிறைவேற்ற இயலாது”.

அவர் மேலும் கூறுகிறார்: “...தாய்மொழி அல்லாமல் மற்றொரு மொழியையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலையில் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவ்வளவாக வளர்ச்சியடையாத இந்தியைவிட, ஒரு வளமான நவீன மொழியாய் நவீன இலக்கிய–தத்துவ–அறிவியல் சிந்தனைகளை வெளியிடும் திறன் கொண்டதாய் இருக்கிற ஆங்கிலத்தையே எவரும் தேர்ந்தெடுப்பர். ஏனெனில், மொழி என்பது சிந்தனை பரிமாற்றத்திற்கும், மக்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவும் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளவுமான சாதனமாக விளங்குகிறது என்பதை நாம் அறிவோம்.

மொழி என்பது சிந்தனை பரிமாற்றத்திற்கான சாதனம் மட்டுமல்ல சிந்தனைக்கான வாகனமே அதுதான். மனிதன் சூன்யத்தில் சிந்திப்பதில்லை. அவன் மொழியின் உதவி கொண்டே சிந்திக்கிறான். மனிதன் மனதில் எழுகிறச் சிந்தனை எதுவாகினும், அது சொற்கோவைகள், சொற்றொடர்கள் அடங்கிய மொழிப் பொருளின் அடிப்படையில் தான் எழவும் வாழவும் இயலும். வார்த்தைகள் வாக்கியங்கள் அடங்கிய மொழி என்ற ‘பொருள் (Material)’ இல்லாமல் சிந்தனை இருப்பதில்லை. மொழி என்பது சிந்தனையின் நேரடியான பொருள் வடிவ வெளிப்பாடாகும். எனவே ஏழ்மையான வளர்ச்சி பெறாத ஒரு மொழி நவீன உயர் சிந்தனைகளை வெளியிட இயலாத, சிந்தனைப் பரிமாற்றத்திற்கான ஓர் பலவீனமான சாதனமாகிவிடுவதோடு, உயர்வான சிந்தனைக் கான பாதையில் ஒரு தடையாகவும் ஆகிவிடுகிறது.

ஏழ்மையான வளர்ச்சி பெறாத மொழி ஒன்றிணைமட்டுமே தெரிந்திருக்கிற மனிதனால் உயர் சிந்தனைகளைச் சிந்திக்க முடியாது. எனவே ஏழ்மையான பின்தங்கியதுமான இந்தி போன்ற ஒரு மொழியை பல்வேறு மொழிகளைப் பேசும் பல்வேறு தேசிய இனத்தவரிடையே உயர் சிந்தனைப் பரிமாற்றத்திற்கான சாதனமாய் ஏற்றுக் கொள்வதினால் நம் நாட்டின் சிந்தனை முன்னேற்றத்தைத் தடுக்கிற, கலாச்சாரப் பின்னடைவை ஏற்படுத்துகிற அபாயம் நிறைய உள்ளது. இந்தியை இணைப்பு மொழியாக்கி விட்டால் இந்த மோசமான விளைவுகளிலிருந்து தப்பிக்க இந்தி பேசுவோர், இந்தி பேசாதோர் இரு சாராருக்குமே எந்த வழியும் இருக்காது”.

அவரது கூற்றில் உள்ள உண்மைகளையெல்லாம் புறந்தள்ளிவிட்டு, இந்தியை ஒற்றை ஆட்சிமொழியாகவும் பயிற்று மொழியாகவும் ஏற்கவேண்டுமென்று மக்களை நிர்ப்பந்திப்பது நிச்சயம் பாரபட்சமானதாகும். மேலும், இந்தி பேசுவோர் உட்பட சாமானிய மக்களிடமிருந்து ஆங்கிலத்தை அகற்றுவது மேம்பட்ட அறிவுக் கதவை மூடி மக்களை அறியாமையில் தள்ளும் மோசடி நடவடிக்கையாகும். இந்த உண்மையை உணர்ந்து இந்தி பேசும் மக்கள் மொழிவெறித் தூண்டலுக்கு பலியாகிவிடாமல் ஆங்கிலமொழி அகற்றலுக்கு எதிராகப் போராடவேண்டும்.

மத்திய அரசாங்கத்தின் இந்தப் பேரழிவு மொழிக் கொள்கைக்கு எதிராக அகில இந்திய கல்விப் பாதுகாப்பு கமிட்டி, தென்னிந்திய மொழிப் பாதுகாப்பு மாநாட்டை பிப்ரவரி **17, 2023** அன்று சென்னையில் நடத்துகிறது. கல்வியை நேசிக்கும் அனைவரும் இதற்கு ஆதரவுக் கரம் நீட்டி, இதில் கலந்துகொண்டு இம்மாநாட்டை வெற்றிபெறச் செய்ய முன்வரவேண்டும் ■

**ஆங்கிலத்தை அகற்றி**

**ஒற்றை ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக இந்தியை திணிப்பதை எதிர்த்து**

**தென்னிந்திய மொழிப் பாதுகாப்பு மாநாடு**

*பிப்ரவரி 17, 2023 காலை 10.30*

*சர் பிடி தியாகராயர் அரங்கம், சென்னை*

*அனைவரும் வருக!*

**AISEC**

**அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டி,** 86673 63199

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம்: பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம்: ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி**

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor: A Rengasamy**
Tel : 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**